வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu
ඊළනාඩු

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 18.02.2023 சனிக்கிழமை | இதழ் : 71 | பக்கங்கள் : 16




# ஒத்திவைக்கப்பட்டது தபால்மூல வாக்களிப்பு

கொழும்பு, பெப். 18

2023 உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு மறுஅறிவித்தல் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் சிறீ ரத்நாயக்க நேற்று அறிவித்துள்ளார்.

முன்னதாக, தபால் மூல வாக்களிப்பு பெப்ரவரி 22, 23, 24 மற்றும் 28 ஆம் திகதிகளில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

அரசாங்க அச்சகமானது தபால் மூல வாக்குச் சீட்டுகளை உரிய நேரத்தில் வழங்காததால் தபால் மூல வாக்களிப்பு பிற் போடப்பட்டுள்ளதாக ஆணையாளர் நாயகம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தபால் மூல வாக்களிப்புக்கான புதிய திகதிகள் விரைவில் அறிவிக்கப்படும் - என்றும் கூறப்பட்டுள்ளது. (ஐ)

## தேர்தலுக்கான நிதி வழங்குவது கடினம்!

### அறிவித்தது நிதி அமைச்சு

கொழும்பு, பெப்ரவரி 18

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு தேவையான நிதியை வழங்குவது கடினம் என்று நிதி அமைச்சின் செயலாளர் தமக்கு அறிவித்துள்ளாரென தேசிய தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்போது, அத்தியாவசிய சேவைகளை பேணுவதற்கு மாத்திரம் நிதி ஒதுக்கீடு செய்ய அரசாங்கம் நிர்வாக ரீதியாக தீர்மானித்துள்ளதாகவும் இதன் போது நிதி அமைச்சு சுட்டிக்காட்டி

15

## பிரச்னையை உருவாக்கவே 13குறித்து பேச்சு

### யாழில் அநுரகுமார

யாழ்ப்பாணம், பெப். 18

தென்னிலங்கையில் பெரிய பிரச்னையை உருவாக்கவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 13 குறித்து பேசுகிறார். இதன் மூலம் ஆட்சியாளர்களுக்கு எதிராக சிங்கள மக்களை குழப்பி, வட மாகாண தமிழ் மக்களுக்கு

15

## கடன் மறுசீரமைப்பு முயற்சி பிரான்ஸ் ஆதரவு வழங்கும்!

### அந்நாட்டு தூதுவர் உறுதி

கொழும்பு, பெப். 18

கடன்களை மறுசீரமைப்பதற்கான இலங்கையின் முயற்சிக்கு ஆதரவு வழங்கத் தயார் என்று இலங்கைக் கான பிரான்ஸ் தூதுவர் ஜீன்-பிரான் கொய்ஸ் பக்றெற் தெரிவித்துள்ளார்.

இலங்கை வர்த்தகப் பேரவையின் இலங்கை - பிரான்ஸ் வர்த்தகக் சபையுடனான சந்திப் பின்பே பாதே பிரான்ஸ் தூதுவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதேவேளை இலங்கையின் பொருளா தார மீட்சியை முன்னிறுத்திய முயற்சிக ளுக்கு பிரான்ஸ் ஆதரவு வழங்கும் என்று

15

## தையிட்டி நரசிம்மர் வைரவர் ஆலயத்தில்

# வைரவர் விக்கிரகம் மாயம் குடிவைக்கப்பட்டார் புத்தர்!





யாழ்ப்பாணம், பெப். 18

**தையிட்டி நரசிம்ம வைரவர் ஆலயத்தின் மூலவர் விக்கிரகம் காணாமல் போயுள்ளது. அத்துடன், விக்கிரகம் இருந்த இடத்தில் புத்தர் சிலைகள் வைத்து வழிபடப்பட்டுள்ளன. அத்துடன், அந்த ஆலயத்தை விகாரையாக மாற்றும்விதத்திலும் செயல்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று கூறப்படுகின்றது.**

தையிட்டி நரசிம்ம வைரவர் ஆலயம் கடந்த 33 வருடங்களாக இராணுவத்தினரின் பிடியிலிருந்து அண்மையிலேயே விடுவிக்கப்பட்டது. இந்த நிலையில், அந்த ஆலயத்தில் வழிபாட்டுக்காக சென்ற மக்களே மேற்படி விடயத்தை வெளிப்படுத்தினர்.

இதுதவிர, ஆலய சூழல்களில் பௌத்த மதத்தை அடையாளப் படுத்தும் கொடிகள் கட்டப்

15

## முன்னாள் துணைவேந்தர் விக்னேஸ்வரன் மறைவு!



யாழ்ப்பாணம், பெப். 18

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் ஆர். விக்னேஸ்வரன் (வயது 65) மாரடைப்பால் நேற்று மாலை காலமானார்.

கணிததுறை பேராசிரியரான ஆர். விக்னேஸ்வரன் யாழ்ப்பாணம் - இணுவிலை சேர்ந்தவர். யாழ்ப்பாணம், கிழக்கு பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளர், பேராசிரியர் பீடாதிபதி எனப் பதவிகளை வகித்த இவர் கடந்த 2017 - 2019 ஆம் ஆண்டுவரை யாழ்ப்பாண

15

## அடுத்துவரும் மாதங்கள் இலங்கைக்கு முக்கியம்!

### ஐ. நா. மனிதாபிமான அலுவலகம்

கொழும்பு, பெப். 18

இலங்கையை பொறுத்தமட்டில் அடுத்த சில மாதங்கள் மிகமுக்கியமானவை யாகும். இதுவரையில் முன்னெடுக்கப்பட்டு வந்த மனிதாபிமான தேவைகள் தொடர்பான செயல் திட்டம் மார்ச் 31 ஆம் திகதியுடன் முடிவுக்கு

15

## கல்முனை மாநகர சபையால் இன முரண்பாட்டுக்கு வாய்ப்பு

### மாநகரின் தமிழ் உறுப்பினர்கள் சாடல்

கல்முனை, பெப். 18

"அம்பாறையின் கல்முனை பொது நூலகத்துக்கு பெயர் மாற்றம் செய்வதை மறுபரிசீலனை செய்யுங்கள். இல்லாவிடின் இன முரண்பாடு உருவாக வாய்ப்புள்ளது", என்று கூறியுள்ளனர் கல்முனை மாநகர சபை தமிழ் உறுப்பினர்கள்.

15




## நாணய நிதிய கடன் மார்ச்சில் கிடைக்கும்!

### ஜனாதிபதி நம்பிக்கை

கொழும்பு, பெப். 18

சர்வதேச நாணய நிதியத்தின் (ஐ. எம். எவ்.) 290 கோடி டொலர் கடன் மார்ச்சில் கிடைக்கும் என எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அரிசி ஆலை உரிமையாளர்களை நேற்று சந்தித்த போதே ஜனாதிபதி இதனை கூறினார்.

இது விடயத்தில் சீனாவின் உத்தரவாதம் 2 வருட உத்தரவாதம் சிக்கல் களை ஏற்படுத்தியது. இந்த நிலையில் இந்தியாவில் சிறிய மற்றும் நடுத்தர நாடுகளுக்கு கடன் வழங்கிய நாடுகளுடனான

15

## இப்படியும் நடக்கிறது...!

கடந்த எட்டாம் திகதியன்று கொள்கை விளக்கம் செய்த ரணில் பதின்மூன்றாவது திருத்தம் பற்றியோ மாகாண சபை பற்றியே ஒரு வார்த்தைகூட பேசவில்லை. மாறாக மாவட்ட அபிவிருத்தி சபை பற்றி அறிவித்தார். எல்லோருக்கும் ரணில் ஆப்பு வைத்துள்ளார்.'

இப்படி திருவாய் மலர்ந்திருப்பவர் யாரென்று இங்கே எழுதித்தான் தெரியவேண்டும் என்பதல்ல. தெரியாதவர்களுக்காக - சொல்லவேண்டியிருக்கின்றது.

இதனைச் சொல்லியிருப்பவர் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்கள்தான்.

ஒரு பாராளுமன்ற உறுப்பினர். சட்டம் படித்த மனுசன். அதைவிட சட்டமேதை பொன்னம்பலத்தின் பேரன் என்ற பல பெருமைகளைக் கொண்ட ஒருவர் ஒரு பொய்யைச் சொன்னால் அதனை நம்பிவிடுவதற்கு பலர் இருப்பார்கள்.

யுத்தம் முடிந்த பின்னர் இரண்டாயிரத்து பத்தாம் ஆண்டு தேர்தல் முடிந்த சில நாட்களில் மக்கள் கூடியிருந்த இடம் ஒன்றில் வைத்து ஒருவர் சொன்னார், 'புலிகள் இல்லை என்றதும் புலிகளின் ஆதரவாளர்களையும் தமிழ் மக்கள் கைவிட்டுவிட்டார்கள்' என்று.

அவர் சொன்னது கஜேந்திரகுமாரின் முன்னணி, பதினையாயிரம் வாக்குகளைப் பெற்று படுதோல்வி அடைந்தது பற்றியது.

அதனைக் கேட்ட மற்றொருவர் சொன்னார், 'இல்லை இல்லை புலிகள் வருவார்கள், அவர்கள் உருவாக்கிய கூட்டமைப்பிலிருந்து முன்னணிக்காரர்கள் வெளியேறியதால்தான் அவர்களை மக்கள் ஆதரிக்கவில்லை' என்று.

இந்த சம்பாசணையைக் கேட்டுக்கொண்டிருந்த இந்த ஊர்க்குருவி, 'புலிகள் வருவார்கள் என்று நீங்கள் நம்புகின்றீர்களா?' என்று கேட்டார்.

அதற்கு அவர் சொன்னார், 'பிரபாகரன் உயிரோடு இருக்கிறார் என்று செய்திகளில் சன் ரீ. வி. சொல்லியதே. அப்படியொரு பெரிய ரீ. வி. தெரியாமல் சொல்லுமா?" என்று,

இதை ஏன் இப்போது சொல்கின்றேன் என்றால், சொல்பவர் ஒரு பெரிய மனுசன் என்றால் அதனை நம்புவதற்கு பலர் இருக்கிறார்கள். அதனைத் தெரிந்து கொண்டுதான் நமது சட்டம் படித்த அரசியல்வாதிகளும் அவ்வப்போது பொய்களை அவிழ்த்துவிடுவது வழக்கமாகி வருகின்றது.

இனி மேலே கஜேந்திரகுமார் கூறியிருக்கின்ற விடயத்திற்கு வருவோம்.

மாகாண சபை பற்றி ஜனாதிபதி வாயே திறக்கவில்லை என்றும் அவர் மாவட்ட அபிவிருத்தி சபை பற்றியே அறிவித்தார் எனவும் சொல்லியிருப்பது ஓர் அப்பட்டமான பொய் என்பதை சுட்டிக் காட்டாமல் இருக்க முடியவில்லை.

ஜனாதிபதி உரையாற்றியது சிங்களத்தில்தான். ஆனாலும் பாராளுமன்ற நேரலையில் அந்த உரைக்கு நேரடியாகவே தமிழிலும் ஆங்கிலத்திலும் மொழி பெயர்ப்பும் ஒளிபரப்பாகியது.

அங்கே ரணில் தெரிவித்தவற்றிலிருந்து சில வரிகளை கீழே தருகின்றோம்:

'அதிகாரப் பகிர்வு செயன்முறையை முறையாக மற்றும் உரியவாறு நடைமுறைப்படுத்த பின்வரும் சட்டங்களுக்கான திருத்த வரைவுகள் தயாரிக்கப்படும். 1992ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க அதிகார பகிர்வு (பிரதேச செயலாளர்கள்) சட்டம், 1989 ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவு ஏற்பாடுகள்) சட்டம் மற்றும் 1990 ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க மாகாண சபைகள் (திருத்த) சட்டம்.

மாகாண சபை மற்றும் மத்திய அரசாங்கத்துக்கு இடையில் ஒருங்கிணைப்புப் பணிகளை முறைமைப்படுத்துவதற்காக நவீன முறையில் மாவட்ட அபிவிருத்தி சபை முறைமையை ஸ்தாபிப்பதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம். இந்த அனைத்து சட்டங்கள் மற்றும் வரைவுகளை நாம் பாராளுமன்றத்தின் தேசிய சபைக்கு சமர்ப்பிப்போம். அது தொடர்பாக கலந்துரையாடி இறுதித் தீர்மானம் எடுக்கும் பொறுப்பு தேசிய சபைக்கு வழங்கப்படும்.'

ரணில் தனது உரையில் முதலாவது பந்தியில் தெரிவித்திருப்பது, பதின்மூன்றாவது திருத்தம் கொண்டுவரப்பட்டு மாகாண சபைகள் உருவாக்கப்பட்ட பின்னர், மாகாண சபைகளிடமிருந்து பறிக்கப்பட்ட அதிகாரங்களை மீள மாகாண சபைகளுக்கு கையளிப்பதற்கான சட்டங்களை தயாரிக்கப்போவதாக.

இரண்டாவதாக அவர் தெளிவாகச் சொன்னது, மாகாண சபை மற்றும் மத்திய அரசாங்கத்துக்கு இடையில் ஒருங்கிணைப்பு பணிகளை முறைமைப்படுத்துவதற்காக நவீன முறையில் மாவட்ட அபிவிருத்தி சபைகளை ஸ்தாபிப்பது என்பதே.

அவர் எந்தக் கட்டத்திலும் மாகாண சபைகளை இல்லாமல் ஆக்கி, மாவட்ட சபைகளை கொண்டுவருவதாக சொல்லவில்லை. இந்த விடயத்தை இங்கே சுட்டிக்காட்டுவதற்காக நாங்கள் மாகாண சபைகளோடு தமிழர் பிரச்னைக்கு தீர்வு வந்துவிடும் என்று சொல்வதாக அர்த்தம்கொள்வது தவறு.

ஒரு பொறுப்பான மக்கள் பிரதிநிதி இவ்வாறு பொய் சொல்லக்கூடாது என்பதை சுட்டிக்காட்டுவதற்காகவே.!

அது சரி, ரணில் எல்லோருக்கும் ஆப்பு வைத்திருக்கிறார் என்றால், உங்களுக்கும் சேர்த்துத்தான் ஆப்பு வைத்துவிட்டார் என்கிறீர்களா? அப்படியெனில், மாகாண சபை இல்லை என்பது உங்களுக்கும் ஆப்பு என்கிறீர்கள் அப்படித்தானே?

**- ஊர்க்குருவி**

# வடமராட்சி கிழக்கு மீனவர்கள் நேற்று மீண்டும் போராட்டம்!

யாழ்ப்பாணம், பெப். 18

வடமராட்சி கிழக்கு மீனவர்களால் நேற்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.



வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் நடைபெறும் சட்டவிரோத கடற்றொழில்களை உடனடியாக கட்டுப்படுத்துமாறு கோரியே இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

நேற்று வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகம் முன்பாக அமைதியான முறையில் இந்தப் போராட்டம் நடைபெற்றது.

வடமராட்சி கிழக்கு பிரதேசத்துக்கு உட்பட்ட 19 கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அண்மைக்காலமாக, வடமராட்சி கிழக்கில் ஒரு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கம் மற்றும் பிற மாவட்டங்களிலிருந்து வருகைதந்தும் மீன்பிடி தொழிலில் ஈடுபடுகின்றனர்.

இதனால் பிரதேசத்தில் உள்ள சிறு மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். ஆகவே, இதனை உடனடியாக தடை செய்ய வேண்டும். அத்துடன், நீரியல் வளத் திணைக்களம், கரையோர பாதுகாப்பு திணைக்களம் கடற்படை என்பன உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் இருப்பதால் சுருக்குவலை தொழில் அதிகளவில் நடக்கிறது.

இதற்கு குறித்த திணைக்களங்கள் துணை போகின்றன என்று போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்கள் தெரிவித்தனர் அத்துடன் அவர்களால் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தரிடம் மனு ஒன்றும் கையளிக்கப்பட்டது.

முன்னதாக கடந்த செவ்வாய்க்கிழமையும் இப்பகுதி மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஐ -02)

# ஜப்பானில் நடந்த வாகன விபத்தில் இலங்கை இளைஞர்கள் இருவர் பலி!

கொழும்பு, பெப். 18

ஜப்பானில் இடம்பெற்ற விபத்தில் இலங்கையைச் சேர்ந்த இரு இளைஞர்கள் உயிரிழந்தனர்.

இந்த விபத்து கடந்த 12 ஆம் திகதி இரவுவேளை இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்து தொடர்பில் 32 வயதான நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். குறித்த நபர் மது போதையில் வாகனத்தை செலுத்தியுள்ளார் என்று ஜப்பான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

விபத்துக்குள்ளான மற்ற வாகனத்தை செலுத்திய மாத்தறையைச் சேர்ந்த 26 வயதான நிசால் சாருக மற்றும் சிலாபம் பகுதியைச் சேர்ந்த 27 வயதான ரஜித்த லக்மால் ஆகியோரே விபத்தில் உயிரிழந்தனர்.

லக்மால் விபத்து நடைபெற்ற அன்றைய தினமும், சாருக விபத்து நடந்து மூன்று நாட்களின் பின்னரும் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்தவர்களின் சடலங்களை நாட்டுக்கு கொண்டுவருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# தற்காலிகமாக முட்டைகளை இறக்குமதி செய்ய அனுமதி!

கொழும்பு, பெப். 18

முட்டை தட்டுப்பாடு மற்றும் தேவையை கருத்தில் கொண்டு, தற்காலிகமாக முட்டைகளை இறக்குமதி செய்ய கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத்துறை அனுமதி வழங்கியுள்ளது.

எவ்வாறாயினும், இந்த முட்டைகள் பேக்கரி தொழிலுக்கு மட்டுமே பயன்படுத்தப்படும் எனவும், பொது பாவனைக்காக கடைகளில் விற்பனை செய்ய அனுமதிக்கப்படமாட்டாது எனவும் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

## சிறுகதை நூல் அறிமுக நிகழ்வு!

யாழ்ப்பாணம், பெப். 18

இயல்வாணன் எழுதிய 'புலர்காலையின் வலி' சிறுகதைத் தொகுப்பின் அறிமுக விழா நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு இமையாணன் கலைமகள் முன்பள்ளி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கலாநிதி சு.குணேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சமூகவியல்துறை விரிவுரையாளர் இ. இராஜேஸ்கண்ணன், எழுத்தாளர் சித்தாந்தன் ஆகியோர் விமர்சன உரைகளை ஆற்றுவர்.

சிறுகதைத் தொகுப்பை முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் இ. தமிழ்மாறன் வெளியிட்டு வைக்க, தென்மராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ந. காண்டீபன் முதல் பிரதியை பெற்றுக் கொள்வார்.

# 5 மருத்துவர்கள் குழு மூலம் தினேஷ் உடல் பரிசோதனை

## நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, பெப். 18

ஐவர் கொண்ட மருத்துவர்கள் குழு ஒன்று பிரபல வர்த்தகர் தினேஷ் சாப்டரின் பிரேத பரிசோதனையை மேற்கொள்ள வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தினேஷ் சாப்டரின் பிரேத பரிசோதனை விசாரணையை முன்னெடுப்பதற்காக ஐந்து மருத்துவர்களின் பெயர்களை சமர்ப்பிக்குமாறு நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

தினேஷ் சாப்டரின் சந்தேகத்துக்கு இடமான மரண விசாரணையின் போது கொழும்பு மேலதிக நீதிவான் ரஜீந்திர ஜெயசூரிய இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார். (ஐ)

# கடலில் நீராடிய 3 மாணவர்கள் மாயம்!

கொழும்பு, பெப். 18

கடலில் நீராடச் சென்ற மூன்று மாணவர்கள் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

மாத்தறை - வெல்லமட பகுதியில் நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மாணவர்களை மீட்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். அத்துடன், கடற்படையினரின் ஒத்துழைப்புடன் மீட்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

(ஐ)

Eelanadu
18.02.2023 சனிக்கிழமை
பிலவ வருடம், மாசி 06

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# திருகோணமலையில் வெளிநாட்டு படைத்தளம்?

மீளவும் பழைய கதையொன்று நினைவுபடுத்தப்பட்டிருக்கின்றது. சில தினங்களுக்கு முன்னர் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சின் கொள்கைசார் உதவி செயலாளர் ஜெடிடியா பி. றோயல் (Jedidiah P. Royal) கொழும்பிற்கு விஜயம் செய்திருந்தார். இதனைத் தொடர்ந்து, அமெரிக்கா இந்தியாவுடன் இணைந்து திருகோணமலையில் படைத்தளமொன்றை நிறுவப் போவதான கதைகளை சிங்கள ஊடகங்கள் பரப்பி வருகின்றன. அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அரசியல் விவகாரங்களுக்கான கீழ்நிலை உதவிச் செயலாளர் விக்ரோறியா நூலண்ட் கொழும்பிற்கு விஜயம் செய்து திரும்பியதைத் தொடர்ந்து இவ்வாறானதொரு கதையை ஆங்கில இணைத்தளமொன்றே முதன்முதலாக வெளியிட்டிருந்தது. வழமையாக அமெரிக்க படைத்தளம் என்று கூறப்படும் இடத்தில் அமெரிக்கா இந்தியாவுடன் இணைந்து படைத்தளமொன்றை நிறுவப்போவதாக குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

சந்திப்பில் ஈடுபட்ட பாதுகாப்பு விவகாரங்களுக்கான இராஜாங்க அமைச்சர் தென்னக்கோன், அமெரிக்க பாதுகாப்பு உயர் அதிகாரி அவ்வாறான நோக்கில் உரையாடவில்லையென்றும் இவ்வாறான செய்திகளில் எவ்வித உண்மையும் இல்லையெனவும் தெரிவித்திருக்கின்றார்.

திருகோணமலையில் அமெரிக்கா படைத்தளமொன்றை நிறுவ முற்படுவதான செய்திகள் புதியவையல்ல. மிகவும் பழையவை. தென்னிலங்கையின் அமெரிக்க எதிர்ப்பு அரசியல்வாதிகள் அவ்வப்போது கூறிவரும் ஒரு கதைதான். உலகம் அமெரிக்க - சோவியத் பனிப்போருக்குள் சிக்குண்டிருந்த காலத்திலும் இவ்வாறானதொரு பார்வை மேலோங்கியிருந்தது. அமெரிக்கா திருகோணமலையின் மீது கண்வைத்திருப்பதான பார்வையொன்று இந்திய பாதுகாப்பு ஆய்வாளர்கள் மத்தியிலும் மேலோங்கியிருந்தது.

1977இல் அதிகாரத்தை கைப்பற்றிய ஜே. ஆர். ஜெயவர்த்தன தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் மேற்குலக சார்பான கொள்கையை முன்னெடுக்க முயற்சித்தது. இந்த நகர்வுகள் இந்திரா காந்தி தலைமையிலான இந்தியாவிற்கு அதிருப்திகளை ஏற்படுத்தியிருந்தது. குறிப்பாக அமெரிக்க குரல் நிறுவனத்திற்கு இலங்கைக்குள் இடமளித்தமை, அமெரிக்க தூதரகத்தில் இஸ்ரேலிய நலன்பிரிவிற்கு அனுமதியளித்தமை மற்றும் திருகோணமலை துறைமுகத்தை அமெரிக்க கடற்படை பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கியமை போன்ற குற்றச்சாட்டுக்கள் ஜே. ஆர். அரசாங்கத்தின் மீது முன்வைக்கப்பட்டது.

ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் நகர்வுகள் இந்தியாவின் தேசிய பாதுகாப்பிற்கு நேரடியாக அச்சுறுத்தல் விடுக்கின்றது என்னும் கண்ணோட்டமே அன்று மேலோங்கியிருந்தது. ஏனெனில், அப்போது இந்தியா சோவியத் யூனியன் செல்வாக்கு வளையத்திற்குள் இணைந்திருந்தது. அமெரிக்கா பாகிஸ்தானுக்கு ஆதரவு வழங்கிவந்த நிலையில் பாகிஸ்தானை உடைப்பதற்கு இந்தியாவிற்கு சோவியத்தின் ஆதரவு தேவைப்பட்டது.

ஆனால், இன்று நிலைமைகள் ஓர் எல்லைக்குள் முடக்கும் அமெரிக்க மூலோபயத்தில் இந்தியாவே பிரதான பங்காளியாக இருக்கின்றது. இந்த நிலையில்தான் அமெரிக்காவும் இந்தியாவும் இணைந்து இலங்கையின் மூலோபாய விடயங்களை கையாள முற்படுவதான செய்திகள் சாதாரணமாக வெளிவருகின்றன. இலங்கை தொடர்பான அமெரிக்க நகர்வுகளில் இந்தியாவின் ஆலோசனையின்றி எதுவும் நடக்காதென்பது உண்மைதான். ஆனால், படைத்தளமொன்றை நிறுவப்போவதான கதைகள் மிகைப்படுத்தப்பட்டனவாகவே இருக்கின்றன. இன்றைய நவீன தொழில்நுட்ப வளர்ச்சியில், குறிப்பிட்ட இடத்தில் பிரமாண்டமான படைத்தளமொன்றை நிறுவித்தான் அமெரிக்காவின் நலன்களை பாதுகாக்க வேண்டுமென்னும் நிலைமையில்லை.

# சிவனுக்கு உகந்த சிவராத்திரி

**வி. ரி. சகாதேவராஜா**



**இந்து மக்களின் பெரு விரதங்களில் ஒன்றான மகா சிவராத்திரி இன்றாகும். இதையொட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.**

*சைவ சமயத்தின் முழுமுதல் கடவுள் சிவபெருமான். அவரின் அனுக்கிரகத்தைப் பெற பல விரதங்கள் கடைப்பிடிக்கப்படுகின்றன. அவற்றுள் முதன்மையானது சிவராத்திரி விரதம் ஆகும். இதனை பெருஞ் சிவனிரவு என்றும் கூறுகின்றனர்.*

*மகா சிவராத்திரியன்று விரதம் இருந்தால், மூன்று பிறவியில் செய்த பாவங்கள் முழுவதுமாக நீங்கும் என்பது ஐதீகம். மனக்கவலைகள், உடல் மற்றும் மன ரீதியான நோய்கள், வறுமை நிலை ஆகியவை நீங்கி வாழ்வில் எல்லா நிலைகளையும் மேன்மை பெறுவதற்கு மகா சிவராத்திரி விரதம் இருந்தால் போதும்.*

*சிவனுக்கு ஒரு ராத்திரி சிவராத்திரி. சக்திக்கு ஒன்பது ராத்திரி நவராத்திரி. மாசி மாதம் வரும் மகா சிவராத்திரி. மகா சிவராத்திரி நாளில் விரதம் இருந்தால் இரு மடங்கு நன்மை. மாதம் ஒரு முறை சிவராத்திரி கொண்டாடப்பட்டாலும் மாசி மாதம் வரும் மகா சிவாராத்திரிக்கு தனி சிறப்பு உண்டு.*

*இந்த ஆண்டுக்கான சிவராத்திரி இன்று - 18ஆம் திகதி - சனிக்கிழமை வருகிறது. எந்த ஆண்டும் இல்லாத ஒரு விசேசமாக, மகா சிவராத்திரியன்றே சனி பிரதோஷமும் நடைபெறுகிறது. எனவே, இந்த ஆண்டு மகா சிவராத்திரி மிகமிக சக்தி வாய்ந்தது மற்றும் சிறப்பானதாகக் கருதப்படுகிறது.*

*பொதுவாக நான்கு சாமப் பூசைகள் ஆலயங்களில் நடைபெறுவதுண்டு. இரவு 8.30 இரவு 10.30 நள்ளிரவு 12.30 பின்னிரவு 2.30 ஆகிய நான்கு சாமங்களில் சிவராத்திரி பூசை வழிபாடு நடைபெறும்.*

*இன்று பகலில் திரயோதசி திதியும், இரவில் சதுர்த்தசி திதியும் சேர்ந்து ஒரே நாளில் வருவதால் இந்த சிவராத்திரி விசேசமான சிவராத்திரியாக அமைந்துள்ளது. இந்த நாளில் பக்தர்கள் விரதமிருக்க இரு மடங்கு பலன் கிடைக்கும் என்பது ஐதீகம். ஆனால், எல்லோராலும் மகா சிவராத்திரியன்று முழுமையாக விரதம் இருக்க முடியாது. "அவன் அருளாலே அவன் தாள் வணங்கி...", என்பது போல சிவபெருமானின் ஆசி இருந்தால் மட்டுமே மகா சிவராத்திரியன்று விரதம் இருக்க முடியும் என கூறுவார்கள்.*

*பண்டைய கால புராணங்கள் மற்றும் இதிகாசங்களில் மகா சிவராத்திரி பற்றி பல கதைகள் இருக்கின்றன. பார்வதி தேவி நீண்ட காலம் கடும் தவமிருந்து, ஈசனை அடைந்த தினம் தான் மகா சிவராத்திரி. உலகம் முழுவதும் கடலில் மூழ்கி உலகில் உயிரினங்களே இல்லாதுபோகும் ஒரு நிலை ஏற்பட்ட நேரத்தில் பார்வதி தேவி உலகத்தில் இருக்கும் உயிர்களை காக்க வேண்டுமென்று தீவிரமாக தவம் இருந்து சிவபெருமானை பூசித்தார். அவர் பூசை செய்த அந்த இரவு தான் மகா சிவராத்திரி நாள் என்பது ஐதீகம்.*

*இதேபோல பார்வதிதேவி சிவபெருமானின் இடது பக்கத்தில் தனக்கு பாகம் பெற்ற நாளும் மகா சிவராத்திரிதான் என்று கூறப்படுகிறது. மகாபாரத காலத்தில், பாண்டவர்களில் ஒருவரான அர்ஜுனன் தீவிரமான தவம் செய்து சிவபெருமானிடம் இருந்து 'பாசுபதம்' என்ற அஸ்திரத்தை வரமாகப் பெற்ற நாள் சிவராத்திரியாகும். அதே போல மார்க்கண்டேயன் என்றென்றும் இளமையாக இறப்பே இல்லாமல் இருப்பதற்கு எமனை சம்ஹாரம் செய்த நாளும் சிவராத்திரிதான்.*

*கண்ணப்ப நாயனார் கதை பற்றி அனைவருக்கும் தெரிந்திருக்கும். அவர் குருதி வழிய தன்னுடைய கண்களை எடுத்து ஈசனுக்கு பொருத்திய அந்த நாளும் சிவராத்திரிதான். அதுமட்டுமில்லாமல் மும்மூர்த்திகளில் விஷ்ணு மற்றும் பிரம்மாவுக்குள் யார் பெரியவர் என்று சண்டை ஏற்பட்ட போது இருவருக்கும் லிங்க வடிவமாக சிவபெருமான் மகா விஸ்வரூப காட்சியளித்ததும் மகா சிவராத்திரி அன்றுதான். மேலும், பிரம்மா மற்றும் விஷ்ணுவைவிட, சிவபெருமான் சக்தி வாய்ந்தவர் என்பதை நிரூபிக்கும் வகையில் ஜோதிலிங்கமாக சிவபெருமான் உருவெடுத்ததும் சிவராத்திரி நாளில்தான் என்று கூறப்படுகிறது.*

*சனிப் பிரதோஷம் மற்றும் மகா சிவராத்திரி இரண்டும் அரிதாக ஒன்றிணையும் இந்த நாளில் விரதம் இருந்து சிவபெருமானை வழிபட்டு வந்தால் நாட்பட்ட நோய்களும் தீரும், தோஷங்கள் நிவர்த்தியாகும், கடன் தொல்லை நீங்கும், வாழ்க்கையில் உன்னதமான நிலையை அடைய முடியும் என கூறப்படுகிறது. அத்துணை சிறப்பு பெற்ற சிவராத்திரியை நாமும் முறைப்படி கடைப்பிடித்து வாழ்வில் உய்வோமாக.*

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஈழநாடு




**மேடம்**
வருமானம் அதிகரிக்கும். நினைத்ததை நிறைவேற்றி மகிழும் நாள். நிதி நிலையில் இருந்த நெருக்கடி விலகும். நீங்கள் ஈடுபடும் செயலில் முன்னேற்றம் ஏற்படும்.

**இடபம்**
நீங்கள் எதிர்பார்த்த பலன்களை இன்று அடைய முடியாமல் போகும். உங்கள் முயற்சியில் இன்று பின்னடைவு ஏற்படும். எதிர்பார்த்த ஒன்று இழுபறியாகும் நாள். செயல்களில் கவனம் தேவை.

**மிதுனம்**
குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். நண்பர்கள் உதவியால் ஒரு எண்ணம் நிறைவேறும். குடும்ப உறவினர்களிடம் ஒற்றுமை உண்டாகும் நாள். மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**கடகம்**
இழுபறியாக இருந்த ஒரு செயல் உங்களுக்கு சாதகமாக முடியும் நாள். தடைகளைத் தாண்டி உங்கள் முயற்சியில வெற்றி அடைவீர்கள். எதிர்த்து செயல்பட்டவர்கள் உங்களிடம் சரண் அடைவார்கள்.

**சிம்மம்**
பிள்ளைகளுக்காக மற்ற வேலைகளை ஒதுக்கி வைப்பீர்கள். உங்கள் முயற்சி வெற்றியாகும். உங்கள் செல்வாக்கு வெளிப்படும் மற்றவர்களால் சாதிக்க முடியாத ஒன்றை சாதிப்பீர்கள்.

**கன்னி**
உங்கள் மனம் காட்டும் வழியில் செல்வீர்கள். எதிர்பார்ப்பு நிறைவேறும். புதிய சொத்து ஒன்று வாங்குவீர்கள். நீங்கள் விரும்பிய வகையில் செயல்படுவீர்கள். நேற்றைய விருப்பம் ஒன்று நிறைவேறும்.

**துலாம்**
நீங்கள் நினைத்ததை சாதித்து மகிழ்வீர்கள். செல்வாக்கு அதிகரிக்கும் நாள். ஒரு சில நெருக்கடி இருந்தாலும் இன்று முயற்சியால் முன்னேற்றம் காண்பீர்கள். துணிச்சலுடன் செயல்படுவீர்.

**விருட்சிகம்**
சேமிப்பு அதிகரிக்கும். பிள்ளைகளின் எதிர்கால நலனில் அக்கறை காட்டுவீர்கள். வியாபாரத்தில் திட்டமிட்டு செயல்படுவதால் லாபம் அதிகரிக்கும். செல்வாக்கு உயரும்.

**தனுசு**
உங்கள் மனம் ஒரு நிலையில் இருக்காது. செயல்களில் தடுமாற்றமும் குழப்பமும் மிஞ்சும். செயலில் நீங்கள் எதிர்பார்த்த நன்மையை அடைய முடியாமல் போகும். எதிர்பார்ப்பு இழுபறியாகும்.

**மகரம்**
எதிர்பாராத செலவுகளால் சங்கடப்படுவீர்கள். உங்கள் செல் வாக்கை வெளிக்காட்டுவதற்கு செலவு செய்யும் நாள். செலவுகளால் நெருக்கடி ஏற்பட்டாலும் உங்கள் விருப்பம் நிறைவேறும்.

**கும்பம்**
நீங்கள் மேற்கொள்ளும் முயற்சி எளிதில் வெற்றியாகும். நிதிநிலை உயரும். பழைய முதலீட்டில் இருந்து லாபம் வரும். நண்பர்கள் ஒத்துழைப்பால் குடும்பத்தில் இருந்த சங்கடங்கள் விலகும்.

**மீனம்**
குடும்பத்தினர் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவீர்கள். பழைய பிரச்னை ஒன்று முடிவிற்கு வரும். வியாபாரத்தை விரிவு செய்ய திட்டமிடுவீர்கள். குடும்பத்தில் ஒத்துழைப்பு அதிகரிக்கும்

# தமிழக மீனவர் சுட்டுக்கொலை; கர்நாடக எல்லையில் பதற்றம்!

சேலம், பெப். 18

சேலம் - மேட்டூர் அருகே தமிழக மீனவர்கள் மீது கர்நாடக வனத்துறையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலியானார். இதையடுத்து இரு மாநில எல்லையில் பதற்றமான சூழ்நிலை நிலவி வருகிறது.

தமிழக - கர்நாடக எல்லையில் உள்ளது பாலாறு வனப்பகுதி. இங்கு தமிழக மீனவர்கள் காவிரியும், பாலாறும் கலக்கும் இடத்தில் பரிசலில் சென்று மீன் பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

செவ்வாய்க்கிழமை பரிசல்களில் சென்ற மீனவர்கள் பாலாற்றில் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது அப்போது அங்கு வந்த கர்நாடக வனத்துறையினர் மீனவர்களை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர். இதில் சிலர் தப்பி கிராமங்களுக்கு சென்று விட்டனர். ஆனால், ஒருவரை காணவில்லை.

இதனால் கர்நாடக வனத் துறையினரின் துப்பாக்கிச் சூட்டில் அவர் பலியாகி இருக்கலாம் என கிராம மக்கள் பாலாற்றங்கரையில் தேடி வந்தனர். பாலாற்றங்கரையில் இருந்த பரிசல்களையும் மீன்பிடி வலைகளையும் கர்நாடக வனத்துறையினர் பறிமுதல் செய்துள்ளனர்.

இந்நிலையில், ஒருவரின் சடலத்தை வனத்துறையினர் கண்டு பொலிஸாருக்கு தகவல் தெரிவித்தனர். காணாமல் போன மீனவரின் சடலமே அது என்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதையடுத்து இரு மாநில எல்லையில் பதற்றமான சூழல் நிலவி வருகிறது. இதைத் தொடர்ந்து இரு மாநில எல்லைகளிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

(ஐ)

# இராமர் பாலம் தொடர்பான வழக்கு; விசாரணைக்கு ஏற்றது உச்சநீதிமன்றம்!

புதுடில்லி, பெப். 18

இராமர் பாலத்தை தேசிய பாரம்பரிய சின்னமாக அறிவிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை விரைவில் விசாரணைக்கு பட்டியலிடுவதாக உச்ச நீதிமன்றம் தெரிவித்து உள்ளது.

பா. ஜ. க. மூத்த தலைவர் சுப்பிரமணியன் சுவாமி உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பொதுநல மனுவில், 'இந்தியாவின் இராமேஸ்வரத்துக்கும் இலங்கைக்கும் இடையே உள்ள இராமர் பாலத்தை தேசிய பாரம்பரிய சின்னமாக அறிவிக்க வேண்டும்' என தெரிவித்திருந்தார்.

இது தொடர்பான வழக்கை நீதிபதிகள் எடுப்பதற்காகக் கூடிய சமயத்தில் மனுதாரரான சுப்பிரமணியன்சுவாமி நீதிபதிகளிடம் 'இராமர் பாலத்தை தேசிய சின்னமாக அறிவிக்க முடியுமா என்ற கேள்விக்கு, ஆம் அல்லது இல்லை என்ற ஏதாவது ஒரு பதிலை மத்திய அரசு தெரிவிக்க வேண்டும்' என்று கோரினார்.

இதற்கு பதில் அளித்த அரசு தரப்பு, 'இராமர் பாலத்தை தேசிய பாரம்பரிய சின்னமாக அறிவிப்பது குறித்த கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது' என தெரிவித்தது.

இதையடுத்து, 'இந்த விவகாரத்தில் மனுதாரர் மேலும் நிவாரணம் கோர விரும்பினால் நீதிமன்றத்தை மீண்டும் அணுகலாம்' என, நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

அவர் நேற்று முன்தினம் இந்த வழக்கு தொடர்பில் மீண்டும் நீதிமன்றை நாடினார். இதையடுத்து நீதிபதிகள், "இந்த வழக்கு விரைவில் விசாரணைக்கு பட்டியலிடப்படும். அரசியல் சாசன அமர்வு, புதுடில்லி நிர்வாகம் தொடர்பான சர்ச்சை உள்ளிட்ட பல்வேறு வழக்கு களை விசாரித்து வருகிறது. இந்த விசாரணை முடிவுக்கு வந்ததும், இராமர் பாலம் குறித்த வழக்கு விசாரணைக்கு பட்டியலிடப்படும்.", என்று உத்தரவிட்டனர்.

(ஐ)

# மதம், சாதிப் பாகுபாடு அ. தி. மு. கவுக்கு கிடையாது

## எடப்பாடி பழனிசாமி



ஈரோடு, பெப். 18

கடந்த 33 ஆண்டு கால அ. தி. மு. க. ஆட்சி இஸ்லாமியர்களுக்கு அரணாக, பாதுகாப்பாக இருந்துள்ளது. அ. தி. மு. கவுக்கு மதமோ, சாதியோ கிடையவே கிடையாது, என ஈரோடு தேர் தல் பிரசாரத்தில் அக்கட்சியின் இடைக்கால பொதுச்செயலா ளர் பழனிசாமி பேசினார்.

மேலும், மின்கட்டண உயர்வு, குடிநீர், சொத்துவரி உயர்வுதான் திமுகவுக்கு வாக்களித்த மக்களுக்கு பரிசாக கிடைத் துள்ளது. விலைவாசி உயர்வை குறைக்க நடவடிக்கை எடுக்க வில்லை.

அ. தி. மு. க. ஆட்சியில் இஸ்லாமியர்களுக்கு பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. அதிமுக ஆட்சி இஸ்லாமியர்களுக்கு அரணாக, பாதுகாப்பாக இருந்துள்ளது. 33 ஆண்டு கால அ. தி. மு. க. ஆட்சியில் இஸ்லாமியர்கள் ஒருவர் கூட பாதிக்கப்பட வில்லை. அ. தி. மு. கவுக்கு மதமோ, சாதியோ கிடையவே கிடையாது. 100 சதவீதம் மதத்துக்கு அப்பால்பட்ட கட்சி அ. தி. மு. க.

(ஐ)

# தமிழ்நாட்டுக்கு இன்று வருகிறார் ஜனாதிபதி!



சென்னை, பெப். 18

ஜனாதிபதி திரௌபதி முர்மு பதவியேற்ற பின்னர் முதன் முறையாக இன்று தமிழகம் வரு கிறார். மதுரை மற்றும் கோவை யில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.

கோவை வெள்ளியங்கிரி மலையடிவாரத்தில் ஈஷா யோகா மையம் உள்ளது. இந்த யோகா மையத்தில் உள்ள ஆதி யோகி சிலை முன்பு இன்று மாலை 6 மணி முதல் மறுநாள் காலை 6 மணி வரை மகா சிவா ரத்திரி விழா விமரிசையாக கொண்டாடப்படுகிறது.

இந்த விழாவில் ஜனாதிபதி திரௌபதி முர்மு பங்கேற்கிறார். இதற்காக ஜனாதிபதி, இன்று காலை டெல்லியில் இருந்து விமானம் மூலம் காலை 11.45 மணிக்கு மதுரை விமான நிலையம் வருகிறார். பின்னர் மதுரை மீனாட்சியம்மன் கோவிலுக்கு செல்லும் அவர், அங்கு சாமி தரிசனம் செய்கிறார்.

ஜனாதிபதி வருகையை முன்னிட்டு கோவை, மதுரையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப் படுத்தப்பட்டுள்ளன. மதுரையில் 5 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

# தோல்வி பயத்தால் தேர்தலை ஒத்திப்போடுவதற்குச் சூழ்ச்சி!

## ஜோசப் ஸ்டாலின் குற்றச்சாட்டு



கொழும்பு, பெப். 18

**தோல்வி அச்சத்தில் எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தாமல் இருப்பதற்கான பல்வேறு சூழ்ச்சிகளை ரணில் - ராஜபக்ச அரசாங்கம் மேற்கொண்டு வருவதாக இலங்கையின் பிரபல தொழிற்சங்கம் ஒன்று குற்றஞ்சாட்டியுள்ளது.**

தேர்தலை நடத்தாமல் மக்களின் ஜனநாயக உரிமையான வாக்குரிமையை இல்லாது செய்வதற்கு அரசாங்கம் முயற்சிப்பதாக இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

வாக்குச் சீட்டுகளை அச்சிட முடியாது என இலங்கை அச்சகம் அறிவித்துள்ள விடயமானது சூழ்ச்சியின் ஒரு அங்கமென அந்த சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரச அச்சகத் தலைவரின் ஊடாக இந்த சூழ்ச்சி இடம்பெறுகிறது. வரலாற்றில் ஒரு நாளும் பணம் இல்லையென இவை இடம்பெறவில்லை. பணம் இல்லையென்றே இந்த நாடகம் நடக்கிறது.

இலங்கை மக்கள் அன்றாடம் எதிர்கொள்ளும் பிரச்னைகளுக்குத் தீர்வை வழங்காத தற்போதைய அரசாங்கம் வாக்குரிமையையும் இல்லாது செய்வதற்கான முயற்சிகளை முன்னெடுக்கிறது. எனினும் அதற்கு ஒருபோதும் இடமளிக்கப்போவது இல்லை - என்றார். (அ)

# ஹிருணிகா உட்பட 9 பேருக்குப் பிணை

கொழும்பு, பெப். 18

ஐக்கிய மக்கள் சக்தியின் மகளிர் பிரிவின் தேசிய அமைப்பாளர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர உள்ளிட்ட 9 பேருக்கு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது.

பொலிஸ் உத்தியோகத்தர்களின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்து கோட்டையிலுள்ள ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்துக்கு அருகில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சம்பவம் தொடர்பில் ஹிருணிகா பிரேமச்சந்திர உள்ளிட்ட 10 சந்தேகநபர்கள் நேற்று கொழும்பு கோட்டை நீதவான் திலின கமகே முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

சந்தேக நபர்கள் ஒவ்வொருவரையும் ஒரு மில்லியன் ரூபா



சரீரப் பிணையில் விடுவிக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடி காரணமாக பொதுமக்கள் எதிர்நோக்கும் இன்னல்கள் குறித்து அதிருப்தியை வெளிப்படுத்தும் வகையில் சந்தேக நபர்கள் ஜூலை 6, 2022 அன்று போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். கோட்டை பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட அவர்கள் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தேர்தலுக்கு வேண்டிய நிதியை வர்த்தகர்களிடம் கோருங்கள்!

## அரசுக்கு ஹிருணிகா ஆலோசனை

கொழும்பு, பெப். 18

தேர்தலுக்குத் தேவையான நிதியை வழங்குமாறு நாட்டில் உள்ள வர்த்தகர்களிடம் கேட்குமாறு அரசுக்கு யோசனை முன்வைத்துள்ளார் ஐக்கிய பெண்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் ஹிருணிகா பிரேமச்சந்திர.

நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அச்சிடும் பணிகளுக்காக தாம் கோரிய நிதி இன்று வரை கிடைக்கவில்லை என அரச அச்சகர் அறிவித்துள்ளார்.

அரச அச்சகர் சமீபத்தில் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்பிய கடிதத்தில், உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான அச்சிடும் பணிகளுக்கு 400 மில்லியன் ரூபா தேவைப்படுவதாக சுட்டிக்காட்டியிருந்தார்.

இது தொடர்பில் கருத்து வெளியிடும்போதே ஹிருணிகா மேற்கண்டவாறு கூறினார். (அ)

# சுகாதார ஊழியரின் மேலதிக நேர கொடுப்பனவுகள் 15 வீதம் குறைப்பு

கொழும்பு, பெப். 18

சுகாதார ஊழியர்களின் மேலதிக நேரம் உள்ளிட்ட கொடுப்பனவுகளை 15 சதவீதம் குறைத்து சுகாதார அமைச்சு சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இதனால் மாதாந்த சம்பளத்தை நம்பியிருக்கும் தாங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார ஊழியர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே இந்த தீர்மானத்தை உடனடியாக மீளப் பெற வேண்டும் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த தீர்மானத்தினால் சுகாதார சேவை பாரிய அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளதாக சுகாதார தொழிற்சங்கங்களின் சம்மேளனத்தின் தலைவர் சமந்த கோரளேராச்சி தெரிவித்தார். (அ)

# ஆடைகளும் விலை உயர்வு!

கொழும்பு, பெப். 18

மின்சார கட்டணத்தை 66 வீதத்தால் அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ள நிலையில், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் அனைத்து ஆடைகளின் விலையையும் 20 வீதம் அதிகரிக்கவேண்டியுள்ளதாக ஆடை உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால் ஏற்படும் சிரமங்களுக்கு தம்மைக் குறை கூறக்கூடாது எனவும், முடிவுகளை எடுக்கும் அதிகார வர்க்கத்தையே குற்றம் சுமத்தவேண்டும் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ)

# தேர்தலை பிற்போடும் சூழ்ச்சிக்கு அரச அச்சகர் ஆதரவளிக்கிறாரா?

## அரச அச்சக ஊழியர் சங்கம் சந்தேகம்

கொழும்பு, பெப். 18

6 இலட்சம் வாக்குச்சீட்டுகள் என்பது மிகவும் குறைந்த தொகை எனவும் அரச அச்சகத்தில் காணப்படும் அச்சிடும் திறனுக்கு அமைய, ஒன்று அல்லது இரண்டு நாட்களில் அதனை அச்சிட முடியும் என அரச அச்சக ஊழியர் சங்கம் கூறியுள்ளது.

வாக்குச்சீட்டு அச்சிடும் பணிகளில் தாமதம் ஏற்பட்டது ஏன் எனவும் அது கேள்வி எழுப்பியுள்ளது.

தேர்தலைப் பிற்போடும் சூழ்ச்சிக்கு ஆதரவாக அரச அச்சகர் செயற்படுகின்றாரா என்ற சந்தேகம் தமக்கு எழுவதாக அது குறிப்பிட்டுள்ளது.

போதிய பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படாமையினால், உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான அச்சீட்டுப் பணிகளுக்கு இடையூறு ஏற்பட்டுள்ளதாக அரச அச்சகர் கங்கானி கல்பனி லியனகே தெரிவித்தார்.

தேர்தலுக்குத் தேவையான அச்சுப்பணிகளுக்கு பொலிஸ் பாதுகாப்பு அவசியம் தேவைப்படுவதாக அவர் தெரிவித்தார்.

பாதுகாப்பான முறையில் அச்சிடும் செயற்பாட்டை முன்னெடுப்பதற்கு குறைந்த பட்சம் 65 பொலிஸாரேனும் தேவைப்படுவதாக அரச அச்சகர் கங்கானி கல்பனி லியகே கூறினார்.

பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படாமையினால், பாதுகாப்புத் தரப்பினரை ஈடுபடுத்தி அச்சிடும் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு முயற்சித்தாலும், அச்சக சேவையாளர்கள் அதற்கு இணக்கம் தெரிவிக்கவில்லை என அரச அச்சகர் கங்கானி கல்பனி லியனகே மேலும் கூறினார். (அ)

# உள்ளூராட்சித் தேர்தலை நடத்தி ஜனநாயகத்தை காக்கவேண்டும்

## வேலுகுமார் எம்.பி. வலியுறுத்து

கொழும்பு, பெப். 18

தேர்தல் நடத்தப்படவேண்டும், ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டும். அதே வேளை, நாட்டுக்கும் வீட்டுக்கும் பயனுடையதாகவும் அமையவேண்டும்." - தமிழ் முற்போக்கு கூட்டணியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலு குமார் தெரிவித்தார்.

கண்டியில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பல சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளது. சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் அதிகார மோதலை ஏற்படுத்தி இருக்கின்றது. தேர்தல் ஆணைக்குழு எதிர்வரும் மார்ச் மாதம் 9 ஆம் திகதி தேர்தல் நடைபெறும் என அறிவித்திருந்தாலும், அதன் பணிகளை முன்னெடுக்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறது. குறைந்த பட்சம் தேர்தல் குறிப்பிட்ட திகதியில் நடைபெறுமா? இல்லையா? என்பதை கூட அறிவிக்க முடியாத நிலையே தென்படுகின்றது.

இன்று தேர்தலை முன்னெடுக்கப் போதிய பணம் இல்லை என அரசாங்கம் கூறுகின்றது. அதேபோன்று நடைபெறவுள்ள தேர்தலில் எண்ணாயிரத்திற்கு அதிகமான உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். அவர்களுக்கான கொடுப்பனவை செய்வது மிகப்பெரிய செலவை நாட்டுக்கு ஏற்படுத்துகின்றது. அத்தகையதொரு செலவினம் தேவையற்றது எனவும் சுட்டிக்காட்டப்படுகிறது. இதிலும் யதார்த்த பூர்வமான உண்மை உள்ளது.

அவ்வாறாயின் இப்போது முன்னெடுக்கவேண்டிய நடவடிக்கை என்ன? என்பதை சிந்திக்கவேண்டும். அதற்கு காலத்திற்கு பொருத்தமான தீர்வை முன்வைக்கவேண்டும். அதனைவிட்டு தேர்தலை அறிவித்து, நாட்டில் ஸ்திரமற்ற அரசியல் நிலை ஒன்றை ஏற்படுத்தி, மக்களிடையில் சுமுகமற்ற நிலை தோன்றுவதற்கு வழிவகுப்பது பொருத்தமானதல்ல. - என்றார். (அ)

# அதிக புகையை வெளியேற்றும் வாகனங்களுக்கு இனி ஆபத்து!

கொழும்பு, பெப். 18

அதிகளவில் புகையை வெளியேற்றும் வாகனங்களை அவதானித்தால், அது குறித்து அறிவிக்குமாறு பொது மக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய அதிக புகையை வெளியேற்றும் வாகனங்களை இலக்கத் தகடு தெளிவாக தெரியும் வகையில் புகைப்படமெடுத்து வட்ஸ்அப் அல்லது வைபர் மூலம் அனுப்புமாறு கோரப்பட்டுள்ளது.

அதன்படி, 070 35 00 525 என்ற இலக்கத்திற்கு வட்ஸ்அப் அல்லது வைபர் மூலம் குறித்த புகைப்படங்களை அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது. (அ)



# கிராஞ்சி, வலைப்பாடு நீர் விநியோகம் ஆரம்பம்

கிளிநொச்சி, பெப். 18

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராஞ்சி வலைப்பாடு நீர் விநியோகத் திட்டம் கடந்த 15ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

858 பயனாளிகளுக்கு உதவும் வகையில், உலக வங்கியின் 228.78 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட குறித்த நீர் விநியோகத் திட்டமே பொதுமக்களின் பாவனைக்கு கையளிக்கப்பட்டுள்ளது.

குறித்த பிரதேச மக்கள் நீண்ட காலமாக குடிதண்ணீர் உட்பட நீர்த் தேவையைத் பூர்த்தி செய்துகொள்வதில் கடும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வந்துள்ளனர்.

வரட்சி மற்றும் கடற்கரையோரத்தை அண்டிய கிராமங்கள் என்பதனால் உவர் நீர் பிரச்னை என பல்வேறு சிரமங்களை எதிர்கொண்ட மக்களுக்கு தற்போது இத்திட்டத்தின் மூலம் நிரந்தர தீர்வு கிடைத்துள்ளது.

நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் நீர் வழங்கல் மற்றும் சுகாதார மேம்பாட்டுத் திட்டமாக இது அமைந்துள்ளது.

இப்பிரதேசத்துக்கு குடிதண்ணீர் வசதியை வழங்குவதன் ஊடாக மக்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கம் என தெரிவித்துள்ள தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர், கிராஞ்சியில் 80 வீதமான மக்களும், பொன்னாவெளி கிராம அலுவலர் பிரிவு, வேரவில் பிரதேசங்களில் 70 வீதத்துக்கு மேற்பட்ட மக்களும் இக்குடிதண்ணீர் இணைப்பை பெற்றுள்ளதாகவும் தெரிவித்தனர்.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க.சிறிமோகனன், பூநகரி பிரதேச செயலாளர் ரி. அகிலன், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் மாவட்ட பொறியியலாளர் எந்திரி எஸ்.சாரங்கன், நீர் வழங்கல் மற்றும் சுகாதார மேம்பாட்டுத் திட்டத்தின் திட்ட முகாமையாளர் யோ.தயாபரன், கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் சி.கோகுலராஜா, தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் உத்தியோகத்தர்கள், நீர் வழங்கல் மற்றும் சுகாதார மேம்பாட்டுத் திட்ட உத்தியோகத்தர்கள், கிராமமட்ட உத்தியோகத்தர்கள், கிராம மக்கள் என பல்வேறு தரப்பினரும் கலந்துகொண்டனர். (அ)

# திருகோணமலையில் அமெ. படைத்தளமா?

## நிராகரித்தார் அமெரிக்க அதிகாரி

கொழும்பு, பெப். 18

**திருகோணமலையில் அமெரிக்க இராணுவதளம் குறித்த பேச்சுவார்த்தைகளுக்காக தான் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுவதை அமெரிக்காவின் பாதுகாப்பு விவகாரங்களுக்கான முதன்மை துணை உதவி செயலாளர் ஜெடியா பி ரோயல் நிராகரித்துள்ளார்.**

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட அமெரிக்க அதிகாரி பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோனை சந்தித்தார்.

திருகோணமலை தளம் குறித்து எதனையும் தெரிவிக்க விரும்பவில்லை என்ற கருத்துடனேயே அமெரிக்க அதிகாரி பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தார் என இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

திருகோணமலையில் தளமொன்றை அமைப்பதற்கு அமெரிக்காவும் இந்தியாவும் திட்டமிடுகின்றன என ஊகங்கள் வெளியாகியுள்ளன.



இந்த சந்திப்பின்போது அமெரிக்காவுடனான பாதுகாப்பு உறவு, இந்தோ-பசுபிக் பாதுகாப்பு உறவு, பிராந்திய ஸ்திரதன்மை, ரஷ்ய-உக்ரைன் யுத்தத்தின் விளைவுகள் குறித்தும் ஆராய்ந்ததாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார். (அ)

# 36,000 மின் இணைப்புகளை வழங்க முடியாத நிலைமை!

கொழும்பு, பெப். 18

நாடளாவிய ரீதியில், 36 ஆயிரம் மின் இணைப்புக்களை வழங்க முடியாதுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

மின் விநியோகத்துக்கு அவசியமான உபகரணங்களைப் பெற்றுக்கொள்வதற்காக, வங்கிகளில் நாணயக் கடிதங்கள் விடுவிக்கப்படாமையால், இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக மின்சார சபையின் பொது முகாமையாளர் ரொஹான் செனவிரத்ன தெரிவித்தார்.

நாடு முழுவதும், பொதுமக்கள் கோரியுள்ள 36 ஆயிரம் மின் இணைப்புகளும், கைத்தொழில் துறைக்கான ஆயிரத்து 200 மின் இணைப்புகளும் வழங்கப்படவில்லை.

மின்பிறப்பாக்கி, வயர், மீற்றர் என்பனவற்றைக் கொள்வனவு செய்ய முடியாதுள்ளது.

இதன் காரணமாக, நாட்டுக்கு பாரிய நட்டம் ஏற்படும் என மின்சார சபையின் பொது முகாமையாளர் ரொஹான் செனவிரத்ன கூறினார். (அ)

# இந்திய நிறுவனங்களிடம் மருந்து கொள்வனவு; உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனு

கொழும்பு, பெப். 18

இரண்டு இந்திய தனியார் நிறுவனங்களிடமிருந்து மருத்துவப் பொருட்களை கொள்வனவு செய்வது தொடர்பில் ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நஷனல் நிறுவனம், உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளது.

அமைச்சரவை அமைச்சர்கள், சுகாதார அமைச்சர், சுகாதார அமைச்சு மற்றும் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு என்பன இது தொடர்பில் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு எதிராக இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

47 பேர் இந்த மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

பதிவு செய்யப்படாத தனியார் விநியோகஸ்தர்களின் மூலம் மருத்துவப் பொருட்களை வாங்குவதில் அமைச்சரவை அமைச்சர்களின் பங்கு, பதிவு செய்யப்படாத விநியோகஸ்தர்களிடம் இருந்து மருத்துவப் பொருட்களை வாங்குவதற்கு பதிவு விலக்கு வழங்குவதில் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் கூட்டுத்தாபனத்தின் பங்கு, என்பவற்றை சவாலுக்கு உட்படுத்தி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மருந்துக் கொள்வனவு, மக்களின் ஆரோக்கியம், பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வைக் கடுமையாகப் புறக்கணிப்பதுடன், பொதுமக்களின் நம்பிக்கை மற்றும் பொது நிதியை முழுவதுமாக துஷ்பிரயோகம் செய்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் குடிமக்களின் அடிப்படை உரிமையான சமத்துவம் மற்றும் தகவல்களை அணுகும் உரிமை ஆகியவை இதன் மூலம் மீறப்பட்டுள்ளதாக அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# முல்லைத்தீவு, குமுழமுனையில் வயல் வேலிக்கு விசமிகளால் தீ!

முல்லைத்தீவு, பெப். 18

முல்லைத்தீவு குமுழமுனை பகுதியில் வயல் வேலிக்கு தீமூட்டி விஷமிகளால் சேதமாக் கப்பட்டுள்ளதாக பொலிஸில் முறைப்பாட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு - குமுழமுனை - தாமரைக்கேணி பகுதியில் உள்ள வயல் காணிக்கு அமைக்கப்பட்ட வேலி நேற்று முன்தினம் இரவு விஷமிகளால் தீமூட்டி சேதமாக்கப்பட்டுள்ளதாக வயல் நிலத்தின் உரிமையாளரால் செம்மலைப் பகுதியிலுள்ள பொலிஸ் காவலரணில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஓய்வுபெற்ற கால்நடை அபிவிருத்தி போதனாசிரியரான வேலுப்பிள்ளை இரத்தின சபாபதி என்பவர் குறித்த வயலில் நெல்லை அறுவடை செய்யத் தயாராக இருந்த நிலையிலேயே இவ்வாறான விசமத்தனமான செயற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. (அ)

# 2,000 இலங்கையர்களுக்கு இஸ்ரேலில் வேலைவாய்ப்பு

கொழும்பு, பெப். 18

இந்த ஆண்டு இலங்கையர்களுக்கு 2, 000 தாதியர் வேலைவாய்ப்பை வழங்க இஸ்ரேல் இணங்கியுள்ளது.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இஸ்ரேலின் விசேட பிரதிநிதிகள் குழு, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்காரவை சந்தித்தபோது, இதற்கான உறுதிப்பாடு வழங்கப்பட்டுள்ளது.

அதேநேரம், இஸ்ரேலுக்கான தாதிய தொழில் வாய்ப்பை வழங்குவதற்காக, இடைத்தரகர்கள் பணம் கோரினால், அது குறித்த தகவல்களை தமக்கு வழங்குமாறு, அந்த நாட்டின் குடித்தொகை மற்றும் புலம்பெயர்வுக்கான அமைப்பின் பிரதிநிதிகள் கோரியுள்ளனர். (அ)

# புத்தளத்தில் ஐ.தே.க வேட்பாளர் போதைப்பொருளுடன் கைது!

கொழும்பு, பெப். 18

புத்தளம் மாநகர சபைக்கு ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் ஹெரோயின் போதைப் பொருளுடன் புத்தளம் தலைமையக பொலிஸின் ஊழல் ஒழிப்புப் பிரிவினரால் நேற்று கைது செய்யப்பட்டார் என தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்டவர் புத்தளத்தைச் சேர்ந்த 54 வயதுடையவர் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அவர் கைது செய்யப்பட்ட போது, மூன்று போதைப் பொருளும் கைப்பற்றப்பட்டது.

கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே இவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் கூறினர். (அ)

# தேர்தல் நடத்துவது தொடர்பில் பொருத்தமான திட்டம் தேவை

## தேர்தல் கண்காணிப்பு மத்திய நிலையம் வேண்டுகோள்

கொழும்பு, பெப். 18

**உள்ளூராட்சி சபை தேர்தலுக்கான செலவினங்களை பெற்றுக்கொள்வது தொடர்பில் எழுந்துள்ள சிக்கலான நிலைமையை தெளிவுபடுத்தி அதனை பாரிய நெருக்கடியாக மாற்றுவதற்குமுதல் சம்பந்தப்பட்ட தரப்பினர் மத்தியில் பேச்சுவார்த்தை மூலம் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை தேர்தல் கண்காணிப்பு தேசிய மத்திய நிலையம் தேர்தல் ஆணைக்குழுவிடம் கேட்டுக்கொண்டுள்ளது.**

அந்த மத்திய நிலையம் இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பெப்ரவரி 13 ஆம் திகதி நாம் கடிதம் ஒன்றின் மூலம் இவ்வாறான நிலைமை ஏற்படுவதற்கு இடமுள்ளதாக எச்சரிக்கை விடுத்திருந்தோம். அதற்காக திறைசேரி, அரசாங்கம், தேர்தல் ஆணைக்குழு ஆகிய தரப்பினர்கள் மத்தியில் பேச்சுவார்த்தையை நடத்தி தீர்வு காணுமாறு கேட்டுக்கொண்டிருந்தோம். அந்த யோசனையை ஏற்றுக்கொண்டிருந்தால் தற்போதைய நிலை உருவாகாமல் தேர்தல் நடத்துவதற்கான சிறந்த இணக்கப்பாட்டுக்கு வரக்கூடிய நிலைமை உருவாகியிருக்கும் என நாம் நம்புகிறோம். அவ்வாறில்லாமல் தற்போது அதிகாரிகள் மத்தியில் அச்சுறுத்தல் விடுப்பது உள்ளிட்ட அச்சத்தை உண்டுபண்ணுவதன் மூலம் சில விடயங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள சில நபர்கள் சில தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் சமூக வலைத்தளங்கள், அரசியல் கூட்டங்கள் மற்றும் ஊடக சந்திப்புகளை உபயோகப்படுத்தி பாரிய பாதிப்புக்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. அதில் சம்பந்தப்பட்ட அதிகாரி களது பெயர்களும் குறிப்பிடப் பட்டு அழுத்தங்களும் பிரயோகிக்கப்படுகின்றன.

அரசாங்க அச்சகத்தின் தலைவர் கங்கானி லியனகே மற்றும் நிதியமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன ஆகிய இருவரும் நடத்தும் நாடகத்தினால் சில அரசியல் தலைவர்கள் மூலம் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவுக்கும் ஏனைய அதிகாரிகளுக்கும் விடுக்கப்படும் அழுத்தங்கள் தொடர்பில் நாம் எமது அதிருப்தியைத் தெரிவித்துக்கொள்கிறோம் - என்றுள்ளது.

(அ)

# பிரதமர் செயலகத்தில் மின்சாரம் துண்டிப்பு

கொழும்பு, பெப். 18

பிரதமர் செயலகத்தில் மின்சார கட்டணத்தை செலுத்தாத காரணத்தினால் மின்சாரம் துண்டிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு 07, மலர் வீதியில் அமைந்துள்ள பிரதமர் செயலகத்திலேயே மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

6 லட்சம் ரூபாய் மின்சாரக் கட்டணம் செலுத்தப்படாமையால் மின் விநியோகம் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக பிரதமர் அலுவலகத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

அதற்கமைய, நேற்று முன்தினம் பிற்பகல் மின்சாரம் துண்டிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் உயர் அதிகாரிகளுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# மயோன் முஸ்தபாவின் பிரஜாவுரிமை நிறுத்தம்

கொழும்பு, பெப். 18

முன்னாள் பிரதி அமைச்சர் மயோன் முஸ்தபாவின் பிரஜா உரிமையை ஏழு வருடங்களுக்கு இடைநிறுத்தி கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

மேலும், அவருக்கு 6 மாதச் சிறைத்தண்டனையும் 500 ரூபா அபராதமும் விதிக்கப்படும் என மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய பட்டபெந்திகே தெரிவித்தார்.

2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் பீல்ட் மார் ஷல் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவை பெற்றுக்கொள்வதற்காக, பாராளுமன்ற உறுப்பினர் மொஹமட் முஸம்மிலுக்கு 42 இலட்சம் ரூபா கையூட்டாக வழங்கியமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்களின் கீழ் சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பை அறிவிக்கும்போதே நீதிபதி இந்த உத்தரவை பிறப்பித்தார்.

(அ)

## மின் கட்டணம் அதிகரிப்பு

# பால், தயிர், இறைச்சி விலை இரட்டிப்பாகும்

கொழும்பு, பெப். 18

மின்சாரக் கட்டணம் 66 வீதம் உயர்த்தப்பட்டால் பால், தயிர், இறைச்சி உள்ளிட்ட அனைத்துப் பொருட்களின் விலைகளும் இரட்டிப்பாகும் என தேசிய விலங்கு உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நாடு முழுவதும் கால்நடை உற்பத்தியாளர்கள் குளிர்சாதனப் பெட்டிகளைப் பயன்படுத்துகின்றனர். மின்கட்டண அதிகரிப்பால் உற்பத்திப் பொருட்களின் விலைகளை உயர்த்த வேண்டிய கட்டாயம் தற்போது ஏற்பட்டுள்ளது. இதனால் எதிர்காலத்தில் இத்தொழிலை எவ்வாறு தொடர்வது என்ற பிரச்சினையும் தற்போது ஏற்பட்டுள்ளது.

மேலும், தயிர், பால், இறைச்சி உள்ளிட்ட அனைத்து உற்பத்திகள் விலையும் அதிகரிக்கும் அபாயம் உள்ளதாகவும், சம்பந்தப்பட்ட விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் இவற்றை கண்டுகொள்வதில்லை எனவும் அவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். (அ)

# நில அதிர்வுகள் காரணமாகவே திமிங்கலங்கள் கரை ஒதுங்கல்!

கொழும்பு, பெப். 18

இந்தியப் பெருங்கடலில் அண்மைக்காலமாக நில அதிர்வு நடவடிக்கையின் காரணமாகவே கல்பிட்டியில் 14 பைலட் திமிங்கலங்கள் கரை ஒதுங்கியிருக்கலாம் என்று கடல்சார் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் வடமேற்கு முனையின் கல்பிட்டியில் அண்மையில் திமிங்கலங்கள் கரையொதுங்கின.

இந்த பாலூட்டிகளை மீண்டும் கடலுக்குள் அனுப்ப அதிகாரிகள் சுமார் 15 மணி நேரம் கடுமையான முயற்சிகளை மேற்கொண்டனர்.

இதன்போது, 11 திமிங்கலங்களை பாதுகாப்பாக கடலுக்குள் திருப்பி அனுப்பிய நிலையில், 3 திமிங்கலங்கள் உயிரிழந்தன.

இறந்த திமிங்கலங்களின் பிரேதப் பரிசோதனையை முடித்த பின்னர், அது தொடர்பில் நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் உள்ளூர் பாதுகாப்பு தன்னார்வ தொண்டு நிறுவனமான பல்லுயிர் கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கு தலைமை தாங்கும், கடல் உயிரியலாளர் ரணில் நாணயக்கார, திமிங்கலங்கள் இலங்கைக் கரையை அடைவதற்கு இரண்டு முக்கிய காரணங்களை குறிப்பிட்டுள்ளார்.

பைலட் திமிங்கலங்கள், பெரும்பாலும் தங்கள் தலைவரைப் பின்தொடர்கின்றன. தலைவர் நோய்வாய்ப்பட்டால் கரையை அடைகிறார்.

அண்மையில் உயிழந்த 3 திமிங்கலங்களில் ஒன்று தலைவராக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

அத்துடன் இந்தியப் பெருங்கடலில் சமீபத்திய நில அதிர்வு நடவடிக்கைகளும் இந்த திமிங்கலங்கள் கரையை அடையக் காரணமாக இருக்கலாம் என்று ரணில் நாணயக்கார குறிப்பிட்டுள்ளார்.

இதுபோன்ற சம்பவங்கள் இலங்கையில் இதற்கு முன்னர் நிகழ்ந்துள்ளன. 2020 ஆம் ஆண்டில், 120 பைலட் திமிங்கலங்கள் பாணந்துறையின் மேற்கு கடற்கரையில் கரையொதுங்கின.

கொழும்பு தேசிய அருங்காட்சியகத்தால் வெளியிடப்பட்ட ஸ்போலியா ஜெய்லானிகா என்ற சஞ்சிகையின் படி, இலங்கையின் கரையோரங்களில் திமிங்கலங்கள் கரையொதுங்குவது தொடர்பான சம்பவங்கள் 1889 ஆம் ஆண்டுக்கு முந்திய காலப்பகுதியில் இருந்து இடம்பெறுவது பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை அண்மையில் கரையொதுங்கிய திமிங்கலங்களின் மீது சில சிறுவர்கள் ஏறியிருந்தமை அவதானிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனை கண்டித்துள்ள அதிகாரிகள், மிருகத்தை துன்புறுத்துதல் மற்றும் துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பில் சந்தேகநபர்களுக்கு எதிராக குற்றம் சுமத்த முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

(அ)

# 2015 முதல் 2019 வரையான காலம் ஜனநாயகத்தின் சுபீட்சமான யுகம்

## கூறுகிறார் முன்னாள் ஜனாதிபதி

கொழும்பு, பெப். 18

2015 முதல் 2019 வரையிலான காலப்பகுதியே இந்நாட்டு ஜனநாயகத்தின் சுபீட்சமான யுகம் என சுதந்திரகட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

களுத்துறை பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் பங்கேற்று உரையாற்றும்போதே முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவி வகித்த காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட செலவினத்துடன் ஒப்பிடுகையில் நான் அதிகமாக செலவிட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

நான் ஜனாதிபதியாக கடமையாற்றிய காலப்பகுதியில் வேலைப்பளு அதிகமானதால்



பாராளுமன்றில் சில சந்தர்ப்பங்களில் உணவு உட் கொண்டுள்ளேன்.

ஏனைய அனைத்து சந்தர்ப்பங்களிலும், எனது மனைவி சமைத்த உணவையே உட்கொண்டுள்ளேன். இவ்வாறே நான் நாட்டு மக்களின் பணத்தைச் சேமித்தேன்.

நான் ஒருபோதும் வீண் செலவீனம் செய்யவில்லை என்பதற்கு இதுவே உதாரணமாகும்.

அவ்வாறே இலங்கை ஜனநாயகத்திற்கான சுபீட்சமான யுகம் எனது ஆட்சியின்போதே காணப்பட்டது-என்றார். (அ)

# தேர்தல் ஆணைக்குழுவின் செயற்பாடுகளை ஆராய விசேட பாராளுமன்றத் தெரிவுக்குழு

கொழும்பு, பெப். 18

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பில் எழுந்துள்ள பிரச்னைகள் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு பாராளுமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்காமை தொடர்பில் ஆராய்வதற்காக விசேட பாராளுமன்ற தெரிவுக் குழு வொன்றை நியமிக்கும் பிரேரணை பாராளுமன்ற நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவின் மேற்குறிப்பிடப்பட்ட செயற்பாடுகள் காரணமாக பாராளுமன்ற உறுப்பினர்களினதும் , பாராளுமன்றத்தினதும் சிறப்புரிமைகள் மீறப்படும் சம்பவம் தொடர்பான உண்மைகள் ஆராயப்படவேண்டும் என்றும் குறித்த தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழு தொடர்பான உண்மைகளை ஆராய்ந்து பொருத்தமான பரிந்துரைகளை வழங்க விசேட பாராளுமன்ற தெரிவுக்குழுவொன்றை நியமிக்குமாறு கோரி 14 பாராளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பத்துடன் சபாநாயகரிடம் விடுக்கப்பட்ட எழுத்துமூல கோரிக்கையின் பிரகாரம் மேற்படி தீர்மானம் பாராளுமன்ற நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அமெரிக்க, சீன பலூன்கள், செயற்கைக்கோள்கள் நம்மை உளவு பார்க்கின்றனவா?

பெட்ரா சிவிக்





சில தினங்களுக்கு முன்பு அமெரிக்காவின் மான்டானா மாகாணத்தில் உள்ள மிகப்பெரிய நகரமான பில்லிங்க்ஸ் உள்ள மக்கள், வானில் ஏதோ வெள்ளை நிறத்தில் பெரிய வட்டத்தை பார்த்து ஆச்சரியமடைந்தனர். பின்னர் அது சீன உளவு பலூன் என்று சொல்லப்பட்டது. அதேபோல வானில் தென்பட்ட மூன்று ‘பொருட்களை’ அமெரிக்கா சுட்டு வீழ்த்தியது.

ஆனால் அவை என்ன என்பது குறித்து தெளிவாக சொல்லப்படவில்லை. அது என்ன என்ற ஊகங்கள் சமீப நாட்களில் அதிகரித்துள்ளது.

மிஷிகனில் ஹூரான் ஏரிக்கு மேல் அமெரிக்க - கனடா எல்லையில் ஒரு சாதனம் வீழ்த்தப்பட்டது. இதனை அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகள் ‘எண்கோண அமைப்பில் உள்ள ஒன்று” என்று தெரிவித்தனர்.

‘வாயுக்கள் நிறைந்த பலூன்” அல்லது ‘ஒருவகை உந்துவிசை அமைப்பு” 6 ஆயிரத்து 100 மீட்டர் உயரத்தில் பறந்தது. அது விமானப் போக்குவரத்திற்கு இடையூறாக இருந்திருக்கலாம் என அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

அந்தப் பொருட்கள் ஏதேனும் அந்நியப் பொருளாக இருக்கலாமா என்று கேட்டதற்கு இந்த தருணத்தில் நான் எதையும் நிராகரிக்கவில்லை என அமெரிக்க வடக்கு கமாண்ட் கமாண்டர் ஜெனரல் க்ளென் வேன்ஹெர்க் தெரிவித்தார்.

அதேபோல வேன்ஹெர்க் தற்போதைய நிலையில் எந்த அச்சுறுத்தலும் இல்லை என்றும் தெரிவித்தார்.

### அமெரிக்காவால் சுட்டு வீழ்த்தப்பட்ட அந்த ‘மர்மப் பொருள்’ என்ன?

அமெரிக்கா மற்றும் கனடா மீது பறந்த பிறகு சுட்டு வீழ்த்தப்பட்ட ‘பொருட்களின்” எச்சங்களை அதிகாரிகள் கைப்பற்றி வருகின்றனர். அவை எங்கிருந்து வந்தன? அவற்றின் நோக்கம் என்ன என்று அதிகாரிகள் தெளிவுபடுத்தவில்லை.

‘இந்த பொருட்களால் ஏதேனும் தரவுகள் சேகரிக்கப்பட்டனவா என்றும், அதை மீட்க முடியுமா என்றும் அமெரிக்கர்கள் தற்போது ஆராய்ந்து கொண்டிருக்கலாம்,” என பிராட்போட் பல்கலைக்கழகத்தின் சர்வதேச உறவுகள் மற்றும் பாதுகாப்புத் துறை பேராசிரியர் கிறிஸ்டோப் ப்ளாத் தெரிவித்தார்.

கடந்த வாரம் வெள்ளியன்று அலாஸ்காவிலும், சனிக்கிழமையன்று வட மேற்கு கனடாவில் உள்ள யூகானிலும், ‘இரு பொருட்கள்” சுட்டு வீழ்த்தப்பட்டன. அதேபோல ஞாயிறன்று மிஷிகனில் ‘ஒரு பொருள்” சுட்டு வீழ்த்தப்பட்டது. இவை மூன்றும் உளவு பார்த்தலுக்காக பயன்படுத்தப்பட்டனவா என்பது தெரியவில்லை.

இந்த பொருட்கள் பலூனைப் போல இல்லை. இவை மிகவும் சிறியதாக உள்ளன. உடைந்த பாகங்களை கண்டறியும் வரை எதையும் தெளிவாக கூற இயலாது என வெள்ளை மாளிகையின் தேசிய பாதுகாப்புப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அவர் இங்கு பலூன் என்று சொல்வது, ஜனவரி 28ஆம் திகதி அலாஸ்காவின் அலூஷியன் தீவுக்கு மேல் கண்டறிந்த சீன உளவு பலூனைதான். அது எப் - 22 போர் விமானத்தால் பெப்ரவரி 4ஆம் திகதியன்று சுட்டு வீழ்த்தப்பட்டது.

அது சீனாவிலிருந்து வந்தது என்றும், முக்கியமான வலைத்தளங்களை கண்காணிக்க அது பயன்படுத்தப்பட்டது என்றும் அதிகாரிகள் கூறுகின்றனர்.

### உளவு பார்க்க பலூன்களை பயன்படுத்துவது ஏன்? அது எவ்வாறு தகவல்களை சேகரிக்கிறது?

‘இதற்கு முன்பும் இவ்வாறு நடந்துள்ளது. டிரம்ப் அதிபராக இருந்த சமயத்தில், அமெரிக்க வான்பரப்பில் மூன்று பலூன்கள் கண்டறியப்பட்டன. ஆனால் அது அமெரிக்க வான் பரப்பைவிட்டுச் செல்லும் வரை யாருக்கும் தெரியவில்லை” என்கிறார் ஆய்வாளர் ஜூலியானா சூயஸ்.

சந்தேகத்திற்குரிய அந்த சீன பலூன் பல நாட்களுக்கு அமெரிக்காவின் வான் பரப்பில் பறந்து கொண்டிருந்தது. அதன் பின் கனடாவின் வான்பரப்பில் நுழைந்து, அமெரிக்காவின் மேற்கத்திய மாகாணமான மான்டனாவின் வான்பரப்பில் நுழைந்தது என அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர். அங்கே அணு ஆயுதத் தலம் ஒன்று உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**சுமார் ஒரு வார காலத்தில், அமெரிக்க வான் பரப்பில் பறந்த நான்கு ‘பொருட்களை’ அமெரிக்கா சுட்டு வீழ்த்தியுள்ளது. அதில் முதலாவது உளவு பலூன் என்று கூறப்பட்டது. ஆனால் பிற மூன்று என்ன என்பது தெரியவில்லை. அவை நம்மை உளவு பார்க்க பயன்படுத்தப்பட்ட சாதனங்களா?**

அந்த பலூனில் மூன்று பேருந்துகளின் அளவு கொண்ட கொண்டாலாக்கள் (கூடை போன்ற அமைப்பு) இருந்தன என்றும், அதன் எடை ஒரு டன்னுக்கு மேல் என்றும் பென்டகன் தெரிவித்துள்ளது. அதில் பல்வேறு ஆன்டனாக்கள் பொருத்தப்பட்டிருந்தன என்றும் பல்வேறு உளவுத் தகவலை சேகரிக்கும் சென்சார்களுக்கான ஆற்றலை வழங்க சூரிய தகடுகள் அதில் இருந்ததாகவும் கூறப்படுகிறது.

பலூன்கள் தற்போது மிகக் குறைந்த அளவிலேயே பயன்படுத்தப்பட்டு வருகிறது. இருப்பினும் 18 ஆம் நூற்றாண்டிலிருந்து பலூன்கள் உளவு பார்த்தல் பணிக்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

பிரஞ்சுப் புரட்சிக் காலத்திலிருந்து பலூன்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்கிறார் சூயஸ்.

இருப்பினும் தற்போது பயன்படுத்தப்படும் பலூன்களுக்கும் சில நூற்றாண்டுகளுக்கு முன் பயன்படுத்தப்பட்ட பலூன்களுக்கும் வித்தியாசங்கள் இருப்பதாக அவர் தெரிவிக்கிறார்.

‘இன்று பலூன்களில் ஹைட்ரஜனுக்கு பதிலாக ஹீலியம் பயன்படுத்தப்படுகிறது. அது பகலில் விரிகிறது. இரவில் உயரச் சென்று காற்று வெளியேற்றப்படுகிறது. ஹீலியம் இருக்கும் வரை பலூன்கள் மிதந்து கொண்டு இருக்கும்” என விளக்குகிறார் சூயஸ்.

இம்மாதிரியான உளவு பலூன்களில், ரேடார் அல்லது தகவல்களை சேகரிக்கும் வசதி கொண்ட உபகரணங்கள், புகைப்படங்களை எடுக்க கேமராக்கள் ஆகியவை இருக்கும்.

பலூன்கள் எவ்வளவு தூரத்தில் உள்ளதோ அவ்வளவு தூரம் நீங்கள் படங்களை பார்த்து கொள்ளலாம். ஆனால் செயற்கைக்கோள்கள் பலூன்களைக் காட்டிலும் உயரத்தில் இருக்ககூடியவை. நீங்கள் எத்தனை குறைந்த தூரத்திலிருந்து புகைப்படங்களை எடுக்கிறீர்களோ அத்தனை தெளிவாக நீங்கள் பார்த்து கொள்ளலாம்.

### உளவு சேகரிக்கப் பயன்படுத்தப்படும் பிற சாதனங்கள் என்னென்ன?

அமெரிக்க தரவுகளின்படி, சீனா 300 செயற்கைக்கோளுடன் விரிவான உளவு அமைப்பை கொண்டுள்ளது. ஆனால் சீன உளவு அமைப்பின் வலிமை, அமெரிக்காவுக்கு அடுத்தபடியாகத்தான் உள்ளது. ஆனால் பலூன்கள் சில நேரங்களில் அதிக பலனளிக்கும் என சூயஸ் தெரிவிக்கிறார்.

‘பலூன்களுக்கு அதிக செலவு தேவையில்லை. அதை விரைவில் நிறுவ முடியும். செயற்கைக்கோள்கள் கணிக்கப்படும் சுற்று வட்டப் பாதையிலேயே சுழலும். அதேபோல ஒரு நாளில் ஒரே இடத்தில் பல முறை சுற்றி வரும். ஒரு இடத்தில் நிகழும் மாற்றங்களைக் கண்டறியும் அளவுக்கு நீண்ட காலத்திற்கு அந்த பகுதியை ஆராய முடியாது.” என்கிறார் சூயஸ் அதேபோல செயற்கைக்கோள்களும் இதற்கு முன்னர் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளன.

‘ஆனால் நாடுகள் தங்களின் செயற்கைக்கோள்களை மட்டுமே சுட்டு வீழ்த்தியுள்ளன. சீனா அதனின் ஒரு செயற்கைக் கோளைச் சுட்டு வீழ்த்தியுள்ளது. ரஷ்யாவும் அவ்வாறு செய்துள்ளது. அதேபோல இதுவரை எந்த ஒரு நாடும் பிற நாட்டின் செயற்கைக்கோளைச் சுட்டு வீழ்த்தவில்லை” என்கிறார் அவர்.

அதேபோல உளவு பார்க்கும் பணியில் தற்போது ட்ரோன்களும் பயன்படுத்தப்படுகின்றன என்கிறார் சூயஸ்.

‘ஆனால் பனிப்போர் காலத்தின் தொடக்கத்தில் அமெரிக்கா தீயணைப்பு

(09ஆம் பக்கம் பார்க்க)






ஈழநாடு



# பிரபாகரன் சர்ச்சை:

## இலங்கை 13வது திருத்தம் அமுலாக்க முயற்சியில் தாக்கத்தை ஏற்படுத்துமா?

**ரஞ்சன் அருண் பிரசாத்**

இலங்கை தமிழர் பிரச்னைக்கு தீர்வை பெற்றுக்கொ டுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உறுதிமொழி வழங்கிய சில காலத் திற்குள், பிரபாகரன் உயிருடன் உள்ளார் என வெளியி டப்பட்ட கருத்தானது, 13வது திருத்தச் சட்டத்தை நடை முறைப்படுத்துவதில் தாக்கத்தை செலுத்துமா என்ற கேள்வியும் தற்போது பலரது மத்தியில் எழுந்துள்ளது.

தமிழர் பிரச்னைக்கு தீர்வை பெற்றுக்கொடுக்கும் வகையில், இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்திக்கும், இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனவிற்கும் இடையில் 1987ஆம் ஆண்டு இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இலங்கையில் மாகாண சபைகள் உருவாக்கப்பட்டமை, அதனூடாக மாகாணங்களுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படுகின்றமை உள்ளிட்ட சுயநிர்ணய உரிமைகளை வழங்கும் நோக்குடன் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இலங்கையின் அரசியலமைப்பில் 1987ஆம் ஆண்டு உள்வாங்கப்பட்ட இந்த ஒப்பந்தத்திலுள்ள அதிகாரங்கள், 36 வருடங்கள் கடந்தும் இன்று வரை மாகாணங்களுக்கு வழங்கப்படவில்லை.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு, குறித்த அதிகாரங்களை வழங்க வேண்டும் என்பதே பெரும்பாலான தமிழர்களின் கோரிக்கையாக காணப்படுகின்றது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை தவிர்ந்த ஏனைய மாகாணங்கள் பெரும்பாலும் மத்திய அரசாங்கத்தில் ஆட்சியிலுள்ள தரப்பினர் வசம் காணப்படுகின்றமையினால், 13வது திருத்தத்திலுள்ள அதிகாரங்களை ஏனைய மாகாணங்கள் இதுவரை கோராதுள்ளன.

இவ்வாறான நிலையில், மாகாணங்களுக்கு 13வது திருத்தச் சட்டத்திலுள்ள அதிகாரங்களை வழங்க ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உறுதிமொழி வழங்கியிருந்தார்.

இதற்காக கடந்த காலங்களில் பல்வேறு சந்தர்ப்பங்களில் சர்வகட்சி மாநாடு கூட்டப்பட்டு பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்ட போதிலும், அந்த பேச்சுவார்த்தைகளின் ஊடாக இன்று வரை சாதகமான பதில் கிடைக்கப் பெறவில்லை.

இலங்கையின் 75வது சுதந்திர தினத்திற்கு முன்பாக தமிழர்களுக்கான அதிகாரங்கள் வழங்கப்படும் என ரணில் விக்ரமசிங்கவினால் வழங்கப்பட்ட உறுதிமொழி, சுதந்திர தினத்திற்கு முன்பாக நிறைவேற்றப்படவில்லை.

பேச்சுவார்த்தைக்கு தமிழர்கள் தரப்பு பிரதிநிதிகள் உரிய வகையில் கலந்துக்கொள்ளாமையே, அதிகாரங்களை வழங்க முடியாமைக்கான காரணமாக அமைந்தது என ஜனாதிபதி தரப்பைச் சார்ந்தோர் தெரிவிக்கின்றனர்.

அதேபோன்று, 13வது திருத்தச் சட்டத்தை அமல்படுத்த வேண்டாம் என பௌத்த பீடங்களின் மகாநாயக்க தேரர்களும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு அறிவித்திருந்தனர்.

அதேபோன்று, 13வது திருத்தச் சட்டத்தை அமல்படுத்தும் ஜனாதிபதியின் தீர்மானத்திற்கு எதிராக பௌத்த பிக்குகள் கொழும்பில் ஒன்று கூடி கடந்த 8ஆம் தேதி பாரிய போராட்டத்தை நடத்தியிருந்தார்கள்.

இதன்போது பௌத்த பிக்குகளினால் 13வது திருத்தச் சட்டம் தீ வைக்கப்பட்டு, தீக்கிரையாக்கப்பட்டது.

தமிழர்களுக்கு அதிகாரங்களை வழங்குவதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உறுதி வழங்கிய போதிலும், அவரது உறுதிமொழிக்கு எதிராக உள்நாட்டில் கடுமையான எதிர்ப்புக்கள் வெளியிடப்படுகின்றமையானது, அதிகார பகிர்வுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகம் இல்லை.

இவ்வாறான நிலையில், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப் பிள்ளை பிரபாகரன் உயிருடன் உள்ளதாக உலகத் தமிழர் பேரமைப் பின் தலைவர் பழ. நெடுமாறன் தமிழகத்திலிருந்து வெளியிட்ட கருத்தானது, தமிழர்களுக்கான அதிகார பகிர்வு வழங்குவதில் சிக்கலை ஏற்படுத்தும் சூழ்நிலை உருவாகுமா என்ற கேள்வி பலரது மனங்களில் எழுந்துள்ளது.


லசந்த ருஹூணுகே

எவ்வாறான கருத்துக்கள் வந்தாலும், 13வது திருத் தத்தை ஜனாதிபதி அமல்படுத்த மாட்டார் என அன்னிதா சிங்கள பத்திரிகையின் பிரதம செய்தி ஆசிரியரும், உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தின் முன்னாள் தலைவரு மான லசந்த ருஹூணுகே தெரிவிக்கின்றார்.



'ஜனாதிபதிக்கு எந்தவித பிரச்சினையும் இல்லை. தனக்கு எதிராக நாட்டில் எழுந்துள்ள எதிர்ப்பு அலைகளை இல்லாது செய்யும் வகையிலும், தனக்கு எதிராக அரசியல் கூட்டணிகளை இல்லாது செய்யும் வகையிலுமே இந்த 13 தொடர்பான அறிவிப்பை அவர் வெளியிட்டார். அவர் அதனை எப்படியும் வழங்க மாட்டார். மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்க போவதில்லை என நாடாளுமன்ற அமர்வுகளை ஆரம்பித்த வைத்து உரையாற்றிய போது, ஜனாதிபதி தெளிவாக கூறினார்.

பொலிஸ் அதிகாரத்தை வழங்கமாட் டேன் என கூறிய பின்னர் வேறு என்ன அதிகாரத்தை வழங்க வேண்டியுள்ளது. ஏனைய அதிகாரங்கள் ஏதோ ஒரு வகையில் பகுதி யளவிலேனும் வழங்கப்பட்டுள்ளன. காணி அதிகாரம் என்று பார்க்கும் போது, மாகாணத்திற்கு காணி ஆணையாளர் ஒருவர் தற்போது இருக்கின்றார். சுகாதாரம், கல்வி அதிகாரங்கள் மாகாணங்களுக்கு காணப்படுகின்றன.

### அடிப்படை இல்லாத விஷயம்

பிரபாகரன் வருகைத் தருவதாக கூறும் விடயத்தில் எந்தவித அடிப்படையும் கிடையாது. இதற்கு முன்னரும் பிரபாகரன் வருவதாக கூறினார்கள். பிரபாகரனின் கதை வருவதற்கு முன்னரே, 13வது அதிகாரம் வழங்குவதற்கு எதிராக பிக்குகள் போராட்டங்களை நடத்தியிருந்தனர்.

ரணிலுக்கு இதனை வழங்க வேண்டும் என்றால், நாடாளுமன்றத்தை பார்த்துக்கொண்டிருக்க வேண்டிய தேவையோ, அல்லது ஒவ்வொருவரிடம் கேட்டுக் கொண்டிருக்க வேண்டிய தேவையோ கிடையாது.

13 என்பது நாட்டிலுள்ள ஒரு சட்டம். அது அரசிய லமைப்பில் உள்ளது. அரசியலமைப்பில் உள்ளதை அமல்படுத்தாதமைக்கு எதிராகவே எவராவது ஒருவர் வழக்கு தாக்கல் செய்ய வேண்டும். அதனை யாரிடமும் கேட்டு வழங்க வேண்டியதில்லை. அவருக்கு தனியாக வழங்க முடியும். இதுவொரு வேடிக் கையானது விடயம்.

13வது திருத்தத்தை வழங்கும் போது, அதற்கு எதிராக எதிர்ப்புக்கள் வருவது என்பது வேறொரு விடயம்.

மாகாண அதிகாரத்திற்கு தேவையான மாகாண பொலிஸ் ஆணைக்குழுக்களை அமைத்து, அதிகாரத்தை வழங்க முயற்சிக்கும் போது எதிர்ப்பு வந்திருந்தால், அது வேறொரு விடயம். அவ்வாறு ஒன்றையும் செய்யாது, தனது வேலையை செய்துக்கொள்வதற்காக அவ்வாறான அறிவிப்பொன்றை வெளியிட்டு மக்கள் மத்தியில் கருத்து வேறுபாடுகளை ஏற்படுத்துகின்றாரே தவிர, அவர் அதனை வழங்க மாட்டார்" என அன்னிதா சிங்கள பத்திரிகையின் பிரதம செய்தி ஆசிரியரும், உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தின் முன்னாள் தலைவருமான லசந்த ருஹூணுகே தெரிவிக்கின்றார். •

# அமெரிக்க, சீன பலூன்கள்....

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

விமானங்களை உளவு விமானங்களாகப் பயன்படுத்தியது. சோவியத் ஒன்றியம் அதை சுட்டு வீழ்த்த நன்றாகப் பழகும் வரை அதைப் பயன்படுத்தியது" என்கிறாப்ளத்.

அதேபோல உளவு பார்த்தலில் பனிப் போர் காலம் புதிய நடைமுறைகளை கொண்டுவந்தது.

'உளவு பார்க்கும் விமானங்கள் அந்த பிராந்தியங்களின் வரைமுறையை மீறுவ தாகக் கருதப்பட்டது. மறுபுறம் கண்கா ணிப்பு செயற்கைக்கோள்களைப் பயன்ப டுத்த அனுமதி வழங்கப்பட்டிருந்தது." என்கிறார் ப்ளத்.

'ஆனால் உளவு பார்க்க பறக்கும் சாதனங்களை பயன்படுத்துவது என்பது புரிந்து கொள்ள சற்று கடினம்தான்" என்கிறார்.

இதில் சில விஷயங்களுக்கு அனுமதி உண்டு சில விஷயங்களுக்கு அனுமதி இல்லை. வெளிநாட்டு பலூன்களுக்கு பொதுவாக அமெரிக்கா அனுமதி அளிப்பதில்லை. இருப்பினும் உளவு விமானங்கள் இன்றளவும் பயன்படுத்தப்படுகின்றன என்கிறார் ப்ளாத்.

'அமெரிக்காவே உளவு பார்க்க பல விமானங்களை பயன்படுத்துகிறது. அது பிற நாடுகளின் எல்லையை ஒட்டி பறக்கும். விமானங்கள் தரையிறக்கப்பட்ட சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன. அமெரிக்க விமானம் ஒன்று சீனாவால் தரையிறக்கப்பட்டது. அது ஒரு ராஜீய சம்பவமாக கருதப்பட்டது. புஷ் ஆட்சிக் காலத்தில் இந்த சம்பவம் நடந்தேறியது" என்கிறார் ப்ளாத்.

-மூன்று பறக்கும் சாதனங்கள் தரையிறக்கப்பட்டபின் அமெரிக்கா ராணுவ எச்சரிக்கையுடன் உள்ளது.

முதல் பலூன் சம்பவம் நடந்த பிறகு அமெரிக்க வெளியுறவுச் செயலர் ஆன்டனி பிளின்கன் சீனாவுக்கான தனது பயணத்தை ரத்து செய்தார்.

ஆனால் அது உளவு பலூன் இல்லை என்றும், வானிலையைக் கண்காணிக்கும் கருவி என்றும் சீனா கூறியது.

கடந்த வருடத்தில் 10க்கும் மேற்பட்ட பலூன்களை சீன வான் பரப்பில் அமெரிக்கா பறக்கவிட்டதாக சீன வெளியுறவுத் துறை அமைச்சகம் திங்களன்று தெரிவித்திருந்தது.

சுட்டு வீழ்த்தப்பட்ட மூன்று 'பொருட்கள்" என்ன என்று அமெரிக்க அதிகாரிகள் ஆராய்ந்து வருகின்றனர்.

'அந்த சாதனங்கள் விமானத்திற்கு இடையூறு விளைவிப்பதால் அவை வீழ்த்தப்பட்டிருக்கலாம்," என்கிறார் ப்ளாத்.

இருப்பினும் இந்த பலூன் சம்பவம் புதிய நடைமுறைகளுக்கு வித்திடலாம் என ப்ளாத் தெரிவிக்கிறார்.

'இந்த பிரச்னைக்கு தீர்வு காணவே அமெரிக்கா விரும்பும். இம்மாதிரியாக உளவு பலூன்களை அனுமதிக்காத வண்ணம் சில ஒப்பந்தங்கள் கொண்டு வரப்படும். வானிலையை கண்காணிக்கும் ஏதேனும் பலூன்கள் இருந்தால் அது அமெரிக்காவின் வான்பரப்பில் நுழைந்தவுடன் தகவல் வழங்க வேண்டும் என்று கோரப்படும்" என்கிறார் ப்ளாத். (பி.பி.சி)

# ‘விடுதலைக்காய் எழுச்சி கொள்வோம்’ நிகழ்வு அக்கரைப்பற்று கடற்கரையில்



அம்பாறை, பெப். 18

“விடுதலைக்காய் எழுச்சி கொள்வோம் - பெண்களுக்கெதிரான வன்முறைகளற்ற வாழ்வைக் கொண்டாடுவோம்” எனும் தொனிப்பொருளில், உலகளாவிய ரீதியில் இடம்பெற்ற நூறு கோடி மக்களின் எழுச்சி எனும் நிகழ்வுக்கு இணையாக, அக்கரைப்பற்று சின்னமுகத்துவார கடற்கரை பிரதேசத்தில் நேற்று முன்தினம் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றன.

அக்கரைப்பற்று பாதிப்புற்ற பெண்கள் அரங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வுகளில் அரங்கத்தின் தலைவி உள்ளிட்ட இணைப்பாளர்கள் மற்றும் இளைஞர் - யுவதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

ஆரம்ப நிகழ்வாக பாதிப்புற்ற பெண்கள் அரங்கத்தின் அலுவலகத்தில் இருந்து இளைஞர் - யுவதிகள் உள்ளிட்டவர்கள் இணைந்து, பெண்கள் அடக்கு முறைக்கு எதிராக வாசகங்களை தாங்கிய சுலோக அட்டை மற்றும் பதாதைகளை தாங்கி சைக்கிள் சவாரி மூல மாக சின்னமுகத்துவாரத்தை சென்றடைந்தனர்.

அங்கு மனித இனத்தில் கிட்டத்தட்ட சரிபாதியாக அடையாளம் காணப்படும் பெண்கள் மீதான வன்முறை களை இல்லாதொழிக்க வேண்டுவதாகவும் இது தொடர்பிலான விழிப்புணர்வு பாடல்கள் மற்றும் உரை யையும் நிகழ்த்தினர்.

வன்முறைகளிலிருந்து விடுதலை பெற்ற சமூகங்களுக்காக எழுச்சி கொள்வோம், முதலாளித்துவத்தின் நுகர்வுப் பண்பாட்டிலிருந்து விடுதலை பெறுவோம் என எழுச்சி கொள்வோம், பூமிக்கெதிரான வன்முறைகளை முடிவுக்கு கொண்டுவர எழுச்சி கொள்வோம் போன்ற கருத்துகளை பாடல்கள், பேச்சுக்கள் மூலமாக வெளியிட்டனர். (அ)




# எரிசக்தி அமைச்சுக்கு முன்பாக ஆர்ப்பாட்டம்

கொழும்பு, பெப். 18

மின்சாரக் கட்டண அதிகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று எரிசக்தி அமைச்சுக்கு முன்பாக மக்கள் குழுவொன்று கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டது.

மின் கட்டண அதிகரிப்பை உடனடியாக இடைநிறுத்துங்கள் என்ற கோசத்தின் கீழ் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட குழுவினர், அமைச்சின் பிரதான வாயிலை மூடி பதாதை ஒன்றையும் கட்டி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பிரதான வாயிலை முற்றுகையிடவேண்டாம் என்றும், அப்படி செய்தால் கைது செய்யப்படுவார்கள் என்றும் பொலிஸார் தெரிவித்ததையடுத்து, பொதுமக்கள் கலைந்து சென்றனர். (அ)

# மட்டக்களப்பு வாவியில் இளைஞனின் சடலம் மீட்பு!

மட்டக்களப்பு, பெப். 18

மட்டக்களப்பு வாவியில் இருந்து இளைஞன் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட லேடி மெனிங் வீதிக்கு அருகாமையில் உள்ள வாவியில் நேற்றுமுன்தினம் மாலை குறித்த இளைஞன் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் திருக்கோயில் பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய ரீ.சுதர்சன் என்ற இளைஞன் என அடையாளம் காணப்பட்டார்.

கடந்த மூன்று தினங்களாக காணாமல் போயிருந்த நிலையில், இவரது சடலம் நேற்றுமுன்தினம் மட்டக்களப்பு வாவியில் மீட்கப்பட்டுள்ளதாக உறவினர்கள் தெரிவித்தனர். (அ)

# திருடப்பட்ட ஓட்டோவை விற்பனைக்கு கொண்டு சென்ற கான்ஸ்டபிள் கைது!

கொழும்பு, பெப். 18

திருடப்பட்ட ஓட்டோவை விற்பனைக்கு எடுத்துச் சென்ற பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் பயாகல பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட கான்ஸ்டபிள் பொலிஸ் அவசர அழைப்புப் பிரிவில் சாரதியாக கடமையாற்றியவர் என களுத்துறை குற்றப் புலனாய்வுப் பிரிவின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளின்போது, பெற்ற சம்பளம் கடனை அடைப்பதற்கு போதுமானதாக இல்லாத காரணத்தினால் இந்த திருட்டைச் செய்ததாகக் கூறியுள்ளார். (அ)

கல்வி tv CHANNEL-1

**18.02.2023**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | தமிழ் |
| 08.15 | தரம்-10 | வரலாறு |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | சித்திரம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | வரலாறு |

கல்வி tv CHANNEL - 2

**18.02.2023**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | English |
| 09.45 | தரம்-03 | அழகியல் |
| 10.30 | தரம்-03 | கணிதம் |
| 11.15 | தரம்-04 | English |
| 12.30 | தரம்-04 | கணிதம் |
| 01.15 | தரம்-05 | Singalam |
| 02.00 | தரம்-05 | கணிதம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | English |
| 06.00 | தரம்-03 | அழகியல் |
| 06.45 | தரம்-03 | கணிதம் |
| 07.30 | தரம்-04 | English |
| 08.15 | தரம்-04 | கணிதம் |
| 09.00 | தரம்-05 | Singalam |
| 09.45 | தரம்-05 | கணிதம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | அழகியல் |
| 12.30 | தரம்-03 | கணிதம் |
| 01.15 | தரம்-04 | English |
| 02.00 | தரம்-04 | கணிதம் |
| 02.45 | தரம்-05 | Singalam |
| 03.30 | தரம்-05 | கணிதம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# மக்கள் மீது வரிகளை சுமத்தாமல் மாற்று வழிகளை கையாளுங்கள்!

## மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் வேண்டுகோள்

மட்டக்களப்பு, பெப். 18

**நாளுக்கு நாள் வாழ்க்கை செலவு அதிகரிப்பதால் மக்கள் வாழ வழியின்றி தவிப்பதாகவும் அவர்களின் கஷ்டங்களை போக்க அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.**



எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர், ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-மின்சாரக் கட்டணம் இலங்கையில் என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளது. தொடர்ந்தும் அதிகரிக்கக் கூடிய வாய்ப்புக்கள் இருப்பதாக அறிவித்துள்ளார்கள். இவ்வாறான அழுத்தங்களால் மக்கள் எப்படி வாழ்க்கை நடத்துவது என்று திண்டாடுகின்றனர்.

கடந்த ஆட்சியாளர்களின் தவறுகள், பிழையான வழிநடாத்தல்கள் மற்றும் அநியாயங்களினாலேயே எமது நாடு இன்று குட்டிச்சுவராகி, அதலபாதாளத்தில் வீழ்ந்துள்ளது. அவ்வாறானவர்களை சேர்த்துக் கொண்டே ஜனாதிபதி ஆட்சியை நடத்துகின்றார். அவர்களை பகைக்காமல் பாதுகாக்கும் நிலையை ஏற்படுத்தி ஜனாதிபதி பல தவறுகளை மேற்கொள்கின்றார். இது நாட்டுக்குச் செய்கின்ற பாரிய துரோகமாகும்.

பொருளாதாரத்தை மீட்டெடுக்க மக்கள் மீது வரிகளை சுமத்துகின்றனர். கடந்த கால ஆட்சியாளர்கள் மேற்கொண்ட தவறுகளால் ஏற்பட்ட நஷ்டத்தை மக்களிடமிருந்து பெற்றுக்கொள்ள முயற்சிப்பது பாரிய அநியாயமாகும். எனவே, மக்கள் மீது சுமைகளை சுமத்துவதை விடுத்து, கடந்த காலத்தில் ஆட்சி செய்தவர்களிடமிருந்து பெற வேண்டியதைப் பெற்று மக்களை பாதுகாக்க வேண்டும்.

மேலும், உரிய நேரத்துக்கு தேர்தலை நடத்த வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். அரசாங்கமும் தேர்தல் ஆணைக்குழுவும் தனித்தனியாக பிரிந்து செயல்படுவது போன்றே எண்ணத் தோன்றுகின்றது. மக்களின் வாக்குரிமையை அறிந்து, ஜனநாயகத்தன்மையை உறுதிப்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். எனவே, அரசாங்கம் தேர்தல் ஆணைக்குழுவுடன் இணைந்து, எதிர்வரும் தேர்தலை உரிய நேரத்தில் நடாத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று அரசாங்கத்திடம் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் வேண்டுகோள் விடுக்கின்றது- என்றார்.

(அ)

# மட்டக்களப்பு காயத்ரி பீடம், சப்தரிஷி வளாக ஆலய சிவராத்திரி விழாவும் புண்ணிய தீர்த்த அபிஷேகமும்

*மட்டக்களப்பு, பெப். 18*

*மட்டக்களப்பு புது முகத்துவாரம் ஸ்ரீகாயத்ரி பீடம், சப்தரிஷி வளாக ஆலய மகா சிவராத்திரி விழாவும் புண்ணிய தீர்த்த அபிசேகமும் திருவாசக முற்றோதலும் இன்று காலை 5.30 மணி தொடக்கம் ஆலய வளாகத்தில் நடைபெறவுள்ளது.*

*இன்று சனிக்கிழமை அதிகாலை 5.30 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை சமுத்திர தீர்த்தம் அடியார்களது கரங்களால் எடுத்துவரப்பட்டு சுவாமிக்கும் சிவலிங்கத்திற்கும் தங்களது திருக்கரங்களால் அபிஷேகம் செய்யப்பட்டதனைத் தொடர்ந்து காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை திருவாசமுற்றோதல் மட்டக்களப்பு சைவத் திருநெறி மன்றத்தினரால் நடத்தப்படவுள்ளது.*

*அதனைத் தொடர்ந்து பி.ப 7 மணி தொடக்கம் 8.30 மணி வரை முதலாம் சாம பூஜை உபயகாரர்களான மட்டக்களப்பு கல்லடி நீர்ப்பாசனத் திணைக்கள உத்தியோகத்தர்களினால் நடத்தப்படவுள்ளது.*

*முதலாம் சாம பூசை முடிவடைந்ததும் காயத்ரி சித்தர் முருகேசு சுவாமிகளின் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை, கலாசார நிகழ்வுகள் இடம்பெறவுள்ளது.*

*இரவு 9 மணி தொடக்கம் அதிகாலை 4 மணி வரை இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் சாம பூசைகள் காயத்ரி குடும்பத்தினர்களால் நடத்தப்படவுள்ளது.*

(அ)

# உள்ளூர் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான கருத்தரங்கு

*திருமலை, பெப். 18*

*திருகோணமலை மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான அறிமுகக் கருத்தரங்கு, திருகோணமலை ஜூபிலி மண்டபத்தில் நேற்று முன் தினம் நடைபெற்றது.*

*தேசிய சமாதானப் பேரவையின் அனுசரணையுடன், சேர்விங் ஹியூமானிட்டி பவுண்டேசன் கிண்ணியா கிளையினால், இந்தக் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.*

*தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு கட்சியில் இருந்தும் தலா 03 வேட்பாளர்களும் திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள பிரதேச சர்வமதக் குழுமத்தின் உறுப்பினர்கள் அனைவரும் இதில் கலந்துகொண்டனர்.*



*நீடித்து நிலைத்திருக்கக்கூடிய சமாதானம், இன ஐக்கியம், சகவாழ்வு மற்றும் பன்மைத்துவம் போன்றவற்றைக் கட்டியெழுப்புவதற்கான பல்வேறு செயற்திட்டங்களையும், பயிற்சிகளையும் தேசிய சமாதான பேரவை பிரதேச மட்டங்களில் மேற்கொண்டு வருகிறது.*

*அவ்வாறான செயற்றிட்டங்களில் ஒன்றான மத சகவாழ்வுக்கான முன்னெடுப்பு எனும் துணைப்பொருளில், சர்வ மத குழுவின் நோக்கு, அதன் இலக்கு, சமூக அங்கீகாரம், உள்ளக ஒற்றுமை, குழுச் செயற்பாடு மற்றும் பெறுபேறு தொடர்பில் இங்கு விரிவாக விளக்கமளிக்கப்பட்டன.*

*கருத்தரங்கின் வளவாளராக தேசிய சமாதானப் பேரவையின் சிரேஷ்ட நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர் எம்.யூ. மதனிஉவைஸ் கலந்துகொண்டார்.* (அ)

# உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிக்கும் விழிப்புணர்வு நிகழ்வு திருமலையில்



*திருமலை, பெப். 18*

*உள்ளூர் சந்தைக்கான உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்கும் நோக்கில் இயற்கை உற்பத்திகளுக்கான விழிப்புணர்வும், விவசாய உணவு உற்பத்திச் சந்தையும் திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.*

*ஜப்பான் அரசாங்க நிதியுதவியின் கீழ் ஜப்பான் நாட்டின் பீஸ் வெயின்ட் அரச சார்பற்ற நிறுவனத்தின் ஏற்பாட்டில், கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களம் மற்றும் கிழக்கு பல்கலைக்கழக சித்த மருத்துவப் பிரிவு இணைந்து நடத்திய இந்த நிகழ்வுக்கு கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் பிரதம அதிதியாகவும், ஜப்பான் நாட்டு தூதுவர் கிடாக்கி மிஸிகோசு கௌரவ அதிதியாகவும், கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி இ.சிறிதர் உள்ளிட்ட அதிகாரிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.*

*உள்ளூர் சந்தைக்கான உள்ளூர் உற்பத்திக்கூடங்களை பிரதம அதிதி கிழக்கு மாகாண ஆளுநர் திறந்து வைத்து அங்கு வைக்கப்பட்டுள்ள உற்பத்திப் பொருட்களையும் பார்வையிட்டார்.*

*திருகோணமலை மாவட்டத்தில் மிகச் சிறந்த முறையில் சேதனைப் பசளைகளை உற்பத்தி செய்து அதன் மூலம் நல்ல விளைச்சலைப் பெற்ற உற்பத்தியாளர்களுக்கு சான்றிதழ் மற்றும் பரிசுப் பொருட்களுடன் நினைவுச் சின்னங்கள் ஆளுநர் மற்றும் ஜப்பான் நாட்டு தூதுவர் கிடாக்கி மிஸிகோசு ஆகியோரினால் வழங்கி கௌரவிக்கப்பட்டன.*

(அ)

# சுகாதார வைத்திய அதிகாரியாக அர்சத் காரியப்பர் கடமையேற்பு



*அம்பாறை, பெப். 18*

*சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரியாக சாய்ந்தமருதை சேர்ந்த மருத்துவர் எம்.ஜே.கே.எம். அர்சத் காரியப்பர், நேற்று முன் தினம் தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொண்டார்.*

*இந்நிகழ்வில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரியாக கடமையாற்றிய டொக்டர் யூ.எல்.எம். நியாஸ் உள்ளிட்ட பொது சுகாதார உத்தியோகத்தர்கள் மற்றும் காரியாலய உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.*

*கடந்த காலங்களில் கல்முனை மாநகர சுகாதார வைத்திய அதிகாரியாக கடமையாற்றிய மருத்துவர் எம்.ஜே.கே.எம். அர்சத் காரியப்பர், மாநகர சுகாதாரப்பிரிவினூடாக பல்வேறு சுகாதார வேலைத்திட்டங்களை முன்னெடுத்திருந்ததுடன், பாவனைக்கு உதவாத வகையில் ஒதுக்கப்பட்ட இயந்திரங்களை மீள் பழுதுபார்ப்பினூடாக மக்களுக்கு உதவும் வகையில் மாற்றியமைத்து மக்கள் பாவனைக்கு கையளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.*

(அ)

# அகில உலக இளம் சைவ மன்றத்தால் சிவராத்திரி கொடி வாரம் அனுஷ்டிப்பு

*மட்டக்களப்பு, பெப். 18*

*மகா சிவராத்திரியை முன்னிட்டு அகில உலக இளம் சைவ மன்றத்தால் சிவராத்திரி தின விழிப்புணர்வு கொடி வாரம் வருடந்தோறும் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.*

*இவ்வருடம் கொடி வாரம் மட்டக்களப் பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.கலாமதி பத்மராஜாவுக்கு சிவராத்திரி தின விழிப்புணர்வுக் கொடி அணிவித்து ஆரம்பித்து வைக்கப்பட்டது.*

*உலக இளம் சைவ மன்றத்தின் செயலாளர் நாயகம் கலாநிதி நல்லசாமி பிரதீபன் ஐயர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் கீ.குணநாயகம், மன்றத்தின் பொருளாளர் பீ.ஜெயகாந்தன், மன்றத்தின் பிரதிநிதிகளான செல்வி எஸ்.சாம்பவி, செல்வி வி.நியோமிதா உள்ளிட்டோர் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தனர்.*

*இதன்போது இளம் சைவ மன்றத்தின் இலட்சனை பொறிக்கப்பட்ட நினைவுச் சின்னமும் அரசாங்க அதிபருக்கு வழங்கப்பட்டதுடன், அனைத்து சமய நம்பிக்கைகளை உள்ளடக்கிய "உலகெலாம்" எனும் நூலின் பிரதியை அதன் ஆசிரியர் கலாநிதி நல்லசாமி பிரதீபன் ஐயரால் மாவட்ட அரசாங்க அதிபருக்கு கையளிக்கப்பட்டது.*

(அ)

# ஆயுதம் மட்டுமே ரஷ்யா புரிந்துகொள்ளும் மொழி!

## உக்ரைன் ஜனாதிபதி தெரிவிப்பு



**கீவ், பெப். 18**

**ஆயுதங்கள் மட்டுமே ரஷ்யா புரிந்துகொள்ளும் மொழி என உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஸெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.**

ரஷ்யாவின் முழு அளவிலான படையெடுப்பின் ஒரு வருடத்தைக் குறிக்கும் வகையில் பிபிசிக்கு அளித்த செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது, ரஷ்யாவுடனான அமைதி ஒப்பந்தத்தில் தனது நாட்டின் எந்தப் பகுதியையும் விட்டுக்கொடுக்க முடியாது என அவர் குறிப்பிட்டார்.

ஒரு முன்னறிவிக்கப்பட்ட வசந்த கால தாக்குதல் ஏற்கனவே தொடங்கிவிட்டதாக கூறிய அவர், ரஷ்ய தாக்குதல்கள் ஏற்கனவே பல திசைகளில் இருந்து நடந்து வருவதாக கூறினார்.

எவ்வாறாயினும், உக்ரைனின் படைகள் ஒரு எதிர்த்தாக்குதலைத் தொடங்கும் வரை ரஷ்யாவின் முன்னேற்றத்தை எதிர்த்து நிற்க முடியும் என்று அவர் நம்புகிறார்.

இருப்பினும், அவர் மேற்கில் இருந்து அதிக இராணுவ உதவிக்கான தனது அழைப்புகளை மீண்டும் மீண்டும் வலியுறுத்தினார்.

நிச்சயமாக, நவீன ஆயுதங்கள் மேற்கத்திய இராணுவ உதவிகள் அமைதியை விரைவுபடுத்துகின்றன என அவர் கூறினார். (அ)

# லிபியாவில் படகு விபத்து! 73 அகதிகள் உயிரிழப்பு!!

*திரிபோலி, பெப். 18*

ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாக புறப்பட்டுச் சென்றவர்களின் படகு ஒன்று லிபிய கடற்கரைப் பகுதியில் கவிழ்ந்ததில் 73 பேர் உயிரிழந்துள்ளனர்.



ஆபிரிக்கா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து மக்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு கடல் வழியே பயணம் மேற்கொள்கின்றனர்.

இதற்கு லிபியாவை ஒரு மைய புள்ளியாக வைத்துள்ளனர். லிபியா நாட்டில் உள்நாட்டு குழப்பம், கிளர்ச்சியாளர்கள் வன்முறை ஆகியவற்றால் ஸ்திரத்தன்மையற்ற அரசாட்சி காணப்படுகிறது.

எண்ணெய் வளமிக்க அந்நாட்டில் இருந்தும் மக்கள் தங்களை பாதுகாத்து கொள்ள வேறு நாடுகளுக்கு புலம்பெயர்ந்து வருகின்றனர்.

இதற்காக அவர்கள் மத்திய தரை கடல் வழியே ஐரோப்பிய நாடுகளுக்கு கப்பல் மற்றும் படகுகள் வழியே அகதிகளாக தப்பிச் செல்கின்றனர்.

இந்நிலையில், ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாக புறப்பட்டு சென்ற படகு ஒன்று லிபிய கடற்கரைப் பகுதியில் கவிழ்ந்துள்ளது.

அவர்களை மீட்கும் பணி நடந்தது. இந்நிலையில், ஐ.நாவுக்கான புலம்பெயர்வோர் அமைப்பு நேற்று முன் தினம் வெளியிட்டுள்ள செய்தியில், இதுவரை 11 உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. 7 அகதிகள் லிபியா கடற்கரைப் பகுதிகளில் நீந்திக் கரை சேர்ந்துள்ளனர் என தெரிவித்துள்ளது.

காணாமல்போன 73 அகதிகளும் நீரில் மூழ்கி உயிரிழந்து இருக்கக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# வடகொரிய ஜனாதிபதியின் மகளின் பெயரை பொதுமக்கள் சூட்டத் தடை!

*பியொங்யாங், பெப். 18*

வடகொரியா வித்தியாசமான உத்தரவுகளுக்கு பெயர் பெற்ற நாடு. அந்த வகையில் புதிதாக ஒரு நூதன அறிவிப்பை வெளியிட்டுள்ளது வடகொரியா. அந்த உத்தரவின்படி, அந்நாட்டு தலைவர்களின் பெயரை இனி அந்நாட்டு மக்கள் வைப்பதற்கு தடை விதிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாது கிம்மின் மகளின் பெயரை வைத்திருக்கும் பெண்கள், சிறுமிகள் தங்கள் பெயரை மாற்றிக் கொள்ளுமாறும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இது குறித்து வடகொரியா அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பில், "கிம் ஜு/ ஏ என்ற பெயருள்ள பெண்கள் மற்றும் சிறுமிகள் தங்கள் பெயரை மாற்றிக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கி



றோம். ஒருவாரத்திற்குள் அவர்கள் தங்கள் பெயரை மாற்றிக் கொள்ள வேண்டும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிம் தனது குழந்தைகளின் புகைப்படங்களை கடந்த சில ஆண்டுகளாக வெளியிடாமல் இருந்து வந்தார். இந்த நிலையில் சில மாதங்களாக கிம்மின் மகள் கிம் ஜு/ ஏ பொதுவெளியில் தனது தந்தையுடன் வலம் வருவதை பார்க்க முடிகிறது.

வடகொரியா தீவிரமான கம்யூனிஸ்ட் ஆட்சி நடக்கும் நாடு. அங்கு ஊடகங்களின் செய்திகூட அரசின் தணிக்கைக்குப் பின்புதான் வெளியாகும். கிம்மின் தந்தையும் முன்னாள் ஜனாதிபதியுமான 2ஆம் கிம் கடந்த 2011ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இறந்தார். அவர் உயிரிழந்த 2 நாட்களுக்குப் பின்பு தான் அந்த செய்தி வெளியுலகிற்கே தெரிந்தது. ஆதலால் வடகொரியாவிலிருந்து எளிதாக எந்த செய்தியும் கசிந்துவிடாது.

மேலும் அங்கு அரசுக்கு எதிரான நடவடிக்கைகளைல் ஈடுபடும் மக்களுக்கு மரண தண்டனைகளும் அவ்வப்போது வழங்கப்பட்டு வருவதாக செய்திகள் வெளியாகின.

இதனை சர்வதேச மனித உரிமை அமைப்புகளும் கடுமையாக விமர்சித்தன.

ஆனால் இந்த குற்றச்சாட்டை வடகொரியா மறுத்து வருகிறது.

# உக்ரைனுக்கு மேல் ரஷ்ய பலூன்கள்!

*கீவ், பெப். 18*

ரஷ்யாவால் ஏவப்பட்ட ஆறு பலூன்கள் கீவ் மீது காணப்பட்டதாகவும், அவற்றில் பெரும்பாலானவை வான் பாதுகாப்பு மூலம் சுட்டு வீழ்த்தப்பட்டன என்று உக்ரைனிய தலைநகரின் இராணுவ நிர்வாகம் தெரிவித்துள்ளது.

பலூன்கள் மூலை பிரதிபலிப்பான்கள் மற்றும் உளவு கருவிகளை சுமந்து சென்றிருக்கலாம், ஆனால் அவை தலைநகரின் மீது எப்போது பறந்தன என்பதை அதிகாரிகள் குறிப்பிடவில்லை, இருப்பினும் புதனன்று கீவில் விமான எச்சரிக்கைகள் வழங்கப்பட்டன.

உக்ரைனிய விமானப்படை செய்தித் தொடர்பாளர் யூரி இஹ்னாட், கடந்த ஆண்டு பெப்ரவரியில் உக்ரைனை ஆக்கிரமித்த ரஷ்யா, அதன் உளவுத்துறை ஆளில்லா விமானங்களின் இருப்புகளைப் பாதுகாக்க ஒரு புதிய இயக்கத்தில் பலூன்களைப் பயன்படுத்தக்கூடும் என்றார்.

கீவ் மீது பலூன்கள் பற்றிய செய்திகள் குறித்து ரஷ்யா உடனடியாக கருத்து தெரிவிக்கவில்லை. (அ)

# ரஷ்யாவைப் போருக்கு தூண்டியது உக்ரைனே!

## பெலாரஸ் குற்றச்சாட்டு



*மின்ஸ்க், பெப். 18*

ரஷ்யாவை சிறப்பு இராணுவ நடவடிக்கைக்கு தூண்டியது உக்ரைன் என்று பெலாரஸ் ஜனாதிபதி அலெக்சாண்டர் லுகாஷென்கோ தெரிவித்தார்.

"இது ஒரு படையெடுப்பு அல்ல. உக்ரைனிய அதிகாரிகள் தான் இந்த நடவடிக்கையைத் தூண்டினார்கள்" என்று லுகாஷென்கோ பத்திரிகையாளர்களுடனான சந்திப்பில் கூறினார் என்று பெல்டா செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

"மோதலை தவிர்க்க அவர்கள் ரஷ்யாவுடன் ஒப்பந்தம் செய்திருக்க வேண்டும்," என்று அவர் மேலும் கூறினார்.

உக்ரைனிய இராணுவத்தைப் பயிற்றுவிப்பதற்காக மின்ஸ்க் ஒப்பந்தங்கள் சாதகமாகப் பயன்படுத்தப்பட்டன என்ற மேற்கத்திய அரசியல்வாதிகளின் வெளிப்பாடுகளை லுகாஷென்கோ சுட்டிக்காட்டினார்.

"எந்தப் படையெடுப்பும் இல்லை. இது ரஷ்யாவின் நலன்களையும், அங்கு வாழும் மக்களையும், ரஷ்ய மக்களையும் பாதுகாப்பது என்று நான் நம்புகிறேன்," என்று அவர் குறிப்பிட்டார்.

ரஷ்யாவின் சிறப்பு இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர், உக்ரைனில் இருந்து பெலாரஸ் மீது ஏவுகணைத் தாக்குதலை நடத்துவதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும் பெலாரஸ் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

2020 இல் மேற்கத்திய நாடுகள் பெலாரஸ் மீது பொருளாதாரத் தடைகளை விதிப்பதற்கு முன்னதாக, உக்ரைனே பெலாரஸ் மீது பொருளாதாரத் தடை விதித்தது என்றும் லுகாஷென்கோ தெரிவித்தார்.

டான்பாஸில் உக்ரைனிய அதிகாரிகள் என்ன செய்தார்கள் என கேள்வியெழுப்பிய அவர், மக்கள் உயிருடன் எரிக்கப்பட்ட ஒடெசா சம்பவத்தை நினைவு கூர்ந்தார்.

"உக்ரைனுக்கு அமைதி வேண்டுமென்றால், நாளை அமைதியைப் பற்றி பேசத் தொடங்குவோம், துப்பாக்கிகள் அமைதியாகிவிடும், ஆனால் நீங்கள் ஐமேற்கு நாடுகள்ஸ விரும்புவது இதுவல்ல. நீங்கள் தான் இந்த அதிகரிப்புக்கு காரணம். மக்கள் இறக்கிறார்கள். எனவே அதை நிறுத்துவோம். அதற்கான நிபந்தனைகள் உருவாக்கப்பட்டுள்ளன" என்று லுகாஷென்கோ கூறினார். (அ)

# இந்திய எல்லையில் நிலநடுக்கம்

*புதுடில்லி, பெப். 18*

இந்தியாவின் ஜம்மு காஷ்மீரில் நேற்று அதிகாலை லேசான நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 3.6 ஆக பதிவானது.

நேற்று அதிகாலை 5 மணியளவில் கத்ரா நகரில் இருந்து 97 கிலோ மீற்றர் தொலைவில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 3.6 ஆக பதிவானது என தேசிய நிலநடுக்கவியல் மையம் தெரிவித்துள்ளது. (அ)

# அண்டர்சன் - பிரோட் புதிய சாதனை!

வெலிங்டன், பெப். 18

இங்கிலாந்து - நியூசிலாந்து அணிகள் இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றன.

முதல் இன்னிங்ஸில் ஆடிய நியூசிலாந்து அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சியாக அமைந்தது.

இதில், கேன் வில்லியம்சன் மற்றும் ஹென்றி நிக்கோல்சை வெளியேற்றினார் ஜேம்ஸ் அண்டர்சன். அடுத்ததாக நீல் வாக்னரை ஸ்டுவர்ட் பிரோட் 27 ஓட்டங்களில் ஆட்டமிழக்க செய்தார்.

இந்த விக்கெட்களை வீழ்த்தியதன் மூலம் ஜேம்ஸ் அண்டர்சன் மற்றும் ஸ்டுவர்ட் பிரோட் ஆகியோர் டெஸ்ட் வரலாற்றில் 1,000 விக்கெட்களை வீழ்த்திய இரண்டாவது பந்துவீச்சு இணை ஆனார்கள்.

முன்னதாக, அவுஸ்திரேலிய ஜாம்பவான்களான கிளென் மெக்ராத் மற்றும் ஷேன் வோர்ண் 104 போட்டிகளில் இணைந்து 1,001 விக்கெட்களை வீழ்த்தியுள்ளனர். இன்னும் இரண்டு விக்கெட்களை ஜேம்ஸ் அண்டர்சன் மற்றும் ஸ்டுவர்ட் பிரோட் வீழ்த்தினால், இணைப்பாட்டம் மூலம் டெஸ்டில் அதிக விக்கெட்களை வீழ்த்திய பெருமையை அடைவர்.

இலங்கையின் முத்தையா முரளிதரன் மற்றும் சமிந்த வாஸ் 895 விக்கெட்களுடன் மூன்றாவது இடத்தில் உள்ளனர். (ஐ)





## உலகக் கிண்ணத் தொடர்

# இலங்கையை இலகுவாக வெற்றிகொண்டது ஆஸி.

கேப்டவுன், பெப். 18

இலங்கை அணியை 10 விக்கெட்களால் இலகுவாக வென்ற அவுஸ்திரேலிய அணி அரையிறுதி சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இருபது - 20 உலகக் கிண்ணத் தொடர் தென்னாபிரிக்காவில் நடக்கிறது. இதில், நேற்று நடந்த போட்டியில் இலங்கை - ஆஸி. அணிகள் மோதின.

இலங்கை நிர்ணயித்த 113 ஓட்டங்கள் என்ற இலகு இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 15.5 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 113 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

இதில், அலிசா ஹீலி, பெத் மூனி ஆகிய இருவரும் அரைச் சதங்கள் குவித்து தமது அணியின் வெற்றியை மிகவும் இலகுவாக்கினர். பெத் மூனி 53 பந்துகளில் 7 பௌண்ட்ரிகள் உட்பட 56 ஓட்டங்களுடனும் அலிசா ஹீலி 43 பந்துகளை எதிர்கொண்டு 6 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸர் உட்பட 54 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் எடுத்திருந்தனர்.

முன்னதாக ஆடிய இலங்கை 20 ஓவர்களில் 8 விக்கெட்களை இழந்து 112 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

இதில், ஹர்ஷிதா சமரவிக்ரம 34 ஓட்டங்கள், சமரி அத்தபத்து 16 ஓட்டங்கள், விஷ்மி குணரட்ன 24 ஓட்டங்கள், நிலக்ஷி டி சில்வா மாத்திரம் 15 ஓட்டங்களைப் பெற்றனர். (ஐ)

# 306 ஓட்டங்களுக்கு சுருண்டது நியூசி.



வெலிங்டன், பெப். 18

இங்கிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் 306 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

இங்கிலாந்து அணி இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடருக்காக நியூசிலாந்து சென்றுள்ளது. மௌண்ட் மௌங்கனியில் வியாழக்கிழமை ஆரம்பமான பகலிரவு டெஸ்டில் நாணயச் சுழற்சியில் வென்ற நியூசிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி அடித்தாடி விரைவாக ஓட்டங்களைக் குவித்தது. 58.2 ஓவர்களில் 9 விக்கெட்களை இழந்து 325 ஓட்டங்களை குவித்த அந்த அணி ஆட்டத்தை இடைநிறுத்தியது.

பதிலுக்கு தனது முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடியது நியூசிலாந்து அணி. முதல்நாள் ஆட்டம் முடிவடைந்தபோது அந்த அணி 37 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களை இழந்திருந்தது. நேற்று தொடர்ந்து ஆடிய அந்த அணிக்கு 17 ஓட்டங்களுடன் களத்திலிருந்த டெவன் கொன்வே மற்றும் 4 ஓட்டங்களை எடுத்திருந்த நீல் வாக்னர் ஆகியோர் ஆட்டத்தைத் தொடர்ந்தனர்.

இருவரும் சற்று நிதானித்து ஆடினர். வாக்னர் 27 ஓட்டங்களை எடுத்திருந்த நிலையில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த டரில் மிற்செல் ஓட்டம் எதையும் எடுக்காமல் வெளியேறினார்.

அடுத்து வந்த ரொம் புளுண்டெல் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இருவரும் இணைப்பாட்டமாக 75 ஓட்டங்களைப் பெற்றனர். அரைச்சதம் கடந்த கொன்வே 151 பந்துகளில் 77 ஓட்டங்களை எடுத்திருந்தார்.

அடுத்து வந்த வீரர்களும் ஓரளவு பொறுமை காத்தநிலையில் புளுண்டெல் தனது நான்காவது சதத்தைப் பூர்த்தி செய்தார். தொடர்ந்து ஆடிய அவர் 138 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார்.

இறுதியாக 82.5 ஓவர்களில் நியூசிலாந்து அணி 306 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

இங்கிலாந்தின் பந்துவீச்சில் ஒல்லி ரொபின்சன் 4, ஜேம்ஸ் அண்டர்சன் 3, பிரோட், லீச், பென் ஸ்ரோக்ஸ் ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

19 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கியது இங்கிலாந்து அணி. நேற்று இரண்டாம் நாள் ஆட்டம் நிறைவடைந்தபோது 2 விக்கெட்களை இழந்து 79 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. கிராவ்லி 28 ஓட்டங்கள், பென் டக்கெற் 25 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

ஒல்லி போப் 14, பிரோட் 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் உள்ளனர். இன்று போட்டியின் மூன்றாவது நாள் ஆட்டமாகும். (ஐ)

## இந்தியாவுடனான டெஸ்ட்

# 263 ஓட்டங்களுக்கு சுருண்டது ஆஸி.!

புதுடில்லி, பெப். 18

இந்திய அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி 263 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது.

இந்தியா சென்றுள்ள பட் கம்மின்ஸ் தலைமையிலான அவுஸ்திரேலிய அணி போர்டர் - கவாஸ்கர் கிண்ணத்துக்காக 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இந்தத் தொடரின் முதல் போட்டியில் இந்தியா இன்னிங்ஸ் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்நிலையில், இரு அணிகளிடையேயான இரண்டாவது டெஸ்ட் போட்டி நேற்று புதுடில்லியில் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணி துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தது. அந்த அணிக்காக டேவிட் வோர்னரர் மற்றும் உஸ்மான் கவாஜா இன்னிங்ஸை தொடங்கினர். இருவரும் 50 ஓட்டங்களுக்கு இணைப்பாட்டம் அமைத்தனர். வோர்னர் 44 பந்துகளில் 15 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். பின்னர், அப்படியே தட்டித்தட்டி ஆடி வந்தது ஆஸி.

இருந்தும் முதல் இன்னிங்ஸின் 23ஆவது ஓவர் இந்திய அணிக்கு திருப்புமுனையாக அமைந்தது. அந்த ஓவரை அஸ்வின் வீசி இருந்தார். மார்னஸ் லபுஷன் மற்றும் ஸ்ரீவ் ஸ்மித் ஆகியோரை அந்த ஓவரில் ஆட்டமிழக்க செய்தார் அஸ்வின். தொடர்ந்து ஹெட், 12 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

பின்னர் வந்த ஹாண்ட்ஸ்கோம்புடன் 59 ஓட்டங்களுக்கு இணைப்பாட்டம் ஏற்படுத்தினார் கவாஜா. 125 பந்துகளில் 81 ஓட்டங்கள் எடுத்த அவர் ஜடேஜா சுழலில் வெளியேறினார். அடுத்த ஓவரில் அலெக்ஸ் ஹாரி ஆட்டமிழந்தார்.

அணித் தலைவர் கம்மின்ஸுடன் 59 ஓட்டங்களுக்கு இணைப்பாட்டம் அமைத்தார் ஹாண்ட்ஸ்கோம்ப். கம்மின்ஸ் 33 ஓட்டங்களில் விக்கெட்டை இழந்தார். மர்பி, லயன் மற்றும் குனேமன் ஆகியோர் தங்கள் விக்கெட்களை அடுத்தடுத்து இழந்தனர்.

78.4 ஓவர்களில் 10 விக்கெட்கள் இழப்புக்கு 263 ஓட்டங்கள் எடுத்தது அவுஸ்திரேலியா. இறுதி வரை ஹாண்ட்ஸ்கோம்ப் ஆட்டமிழக்காமல் இருந்தார். அவர் 142 பந்துகளில் 72 ஓட்டங்கள் எடுத்திருந்தார்.



முதல் இன்னிங்ஸில் ஷமி (4 விக்கெட்கள்), அஸ்வின் மற்றும் ஜடேஜா தலா 3 விக்கெட்களை கைப்பற்றி இருந்தனர்.

இந்திய அணி முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த இந்திய அணி நேற்றைய நாள் ஆட்டம் நிறைவில் விக்கெட் இழப்பின்றி 21 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இன்று போட்டியின் இரண்டாவது நாள் ஆட்ட மாகும். (ஐ)

# கபில்தேவை பின்தள்ளிய அஸ்வின்!



புதுடில்லி, பெப். 18

இந்தியா- அவுஸ்திரேலியா இடையிலான இரண்டாவது டெஸ்ட் டில்லியில் நடக்கிறது.

இதில் ஒரு ஓவரில் இரு முக்கியமான விக்கெட்கள் உட்பட மூன்று விக்கெட்களை கைப்பற்றினார் அஸ்வின்.

இதன் மூலம் ஓர் அணிக்கு எதிராக அதிக விக்கெட்கள் எடுத்தவர்கள் பட்டியலில் இந்திய அணியின் முன்னாள் வீரர் கபில் தேவை பின்னுக்கு தள்ளி 2ஆவது இடத்தை அஸ்வின் பிடித்தார். அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக அஸ்வின் 100 விக்கெட்களை கைப்பற்றியுள்ளார்.

முதல் இடத்தில் அனில் கும்ப்ளே உள்ளார். இவர் அவுஸ்திரேலியா அணிக்கு எதிராக 111 விக்கெட்களை வீழ்த்தியுள்ளார். கபில் தேவ் பாகிஸ்தானுக்கு எதிராக 99 விக்கெட்களை கைப்பற்றியுள்ளார்.

# சக்திவலு கட்டமைப்புகளை இந்தியாவுடன் இணைப்பதால் இலங்கைக்கு ஆபத்தில்லை

## கூறுகிறார் அமைச்சர் காஞ்சன விஜேசேகர



கொழும்பு, பெப். 18

**இலங்கையின் தேசிய சக்திவலு கட்டமைப்புகளை இந்தியாவுடன் இணைப்பதால் இலங்கைக்கு ஆபத்து இல்லை என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.**

இலங்கையின் தேசிய சக்தி வலு கட்டமைப்புகளை இந்தியாவுடன் இணைப்பதால் ஏற்படக்கூடிய ஆபத்துக்கள் குறித்த கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

எங்கள் நாட்டில் சக்தி வலு பாதுகாப்பு காணப்படுவதை உறுதி செய்வதே ஒரு அரசாங்கம் என்ற வகையில் நாங்கள் முன்னெடுக்கவேண்டிய முதல் நடவடிக்கை என அவர் சுட்டிக்காட்டினார்.

சக்தி வலு பாதுகாப்பு என்பது உணவு பாதுகாப்பு, மருந்து பாதுகாப்பு உட்பட அனைத்துடனும் தொடர்புபட்டுள்ளது எனவும் குறிப்பிட்டார்.

இதனடிப்படையில் நாங்கள் தீர்மானங்களை எடுப்போம் இந்தியாவுடன் நெருக்கமான உறவுகளை பேணவேண்டும் என்பது குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியாக தெளிவாக உள்ளார் எனவும் கடந்த 12 மாதங்களில் இந்தியா எங்களுக்கு பெரும் ஆதரவாக காணப்பட்டுள்ளது எனவும் காஞ்சன விஜயசேகர மேலும் தெரிவித்தார். (அ)

# பணவீக்கத்துக்கு ஏற்ப வங்கி வட்டி வீதம் குறைப்பது தொடர்பில் பரிசீலிக்கப்படும்

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



கொழும்பு, பெப். 18

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் திட்டத்தை மார்ச் மாதத்தில் நடைமுறைப்படுத்த எதிர்பார்ப்பதாகவும், தற்போது குறைந்து வரும் பணவீக்கத்துக்கு ஏற்ப வங்கி வட்டி வீதத்தைக் குறைப்பது தொடர்பில் பரிசீலிக்கப்படும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்ரகிமசிங்க தெரிவித்தார்.

சிறிய மற்றும் பாரிய அரிசி ஆலை உரிமையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளையும் அவற்றைத் தீர்க்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆராய்வதற்காக நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

எரிபொருள் விலை, மின் கட்டணம், இயந்திரப் பராமரிப்பு செலவு, போக்குவரத்து செலவு உள்ளிட்ட அனைத்து உற்பத்தி மற்றும் நிர்வாக செலவுகள் உயர்ந்துள்ளதால், அரிசியின் உற்பத்தி செலவு அதிகரித்துள்ளது.

தற்போதைய நெல் உற்பத்தி விலையுடன் ஒப்பிடும்போது, சந்தையில் தற்போதுள்ள அரிசி விலைக்கு தமது உற்பத்திகளை விற்பனை செய்தால் நட்டம் ஏற்படுவதாக அரிசி ஆலை உரிமையாளர்கள் இங்கு சுட்டிக்காட்டினர்.

அதேபோன்று, நெல் கொள்வனவு செய்ய பெற்றுக்கொண்ட வங்கிக் கடனுக்கு 28 வீத வட்டி செலுத்த வேண்டியிருப்பதனால் ஏற்படும் சிரமங்களையும் அவர்கள் முன்வைத்தனர்.

பயிர்ச் செய்கையின்போது விவசாய இடுபொருட்களின் விலைகள் வேகமாக அதிகரித்து வருவதால், நெல் உற்பத்திச் செலவு அதிகரித்துள்ளதாகவும், விவசாயிகள் பயிர்ச்செய்கைக்காக வங்கிகளில் பெற்ற கடனுக்கு அதிக வட்டி செலுத்த வேண்டியுள்ளதாகவும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

இவ்வாறு, விவசாயிகளின் உற்பத்திச் செலவும், அரிசி ஆலை உரிமையாளர்களின் அரிசி உற்பத்திச் செலவும் அதிகரித்துள்ளதால், அரிசி ஆலை தொழிலை முன்னெடுப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாகவும், அரசாங்கம் இதற்கு நிவாரணம் வழங்கவேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இது தொடர்பில் அவதானம் செலுத்திய ஜனாதிபதி, நுகர்வோர் மற்றும் விவசாயிகளுக்கு சகல விதமான நிவாரணங்களையும் வழங்குவது அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு எனக் குறிப்பிட்டார்.

விவசாயிகளின் உற்பத்திச் செலவைக் குறைத்து உற்பத்தியை அதிகரிப்பதற்கும், அரிசி ஆலை உரிமையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளுக்கு உடனடி தீர்வைக் காண்பதற்கும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார். (அ)

# நாவற்குழி எரிபொருள் நிலையத்தின் ஊழியர் மீது நள்ளிரவில் வாள்வெட்டு!

யாழ்ப்பாணம், பெப். 18

கியூ.ஆர். இல்லாமல் பெற்றோல் அடிக்க முடியாது எனக் கூறிய எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர் மீது வாள்வெட்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் - நாவற்குழி பகுதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு 11 மணியளவில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு மோட்டார் சைக்கிளில் வந்த இருவர், பெற்றோல் அடிக்குமாறு கோரியுள்ளனர்.

ஊழியர் கியூ.ஆர். குறியீட்டை கேட்டபோது, கியூ.ஆர். இல்லாமல் அடிக்குமாறு கூறியுள்ளனர்.

அதற்கு ஊழியர் மறுப்பு தெரிவித்தபோது, ஊழியருடன் முரண்பட்டு, தமது உடைமையில்



மறைத்து வைத்திருந்த வாளை எடுத்து ஊழியரை சரமாரியாக வெட்டி விட்டு, அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

தாக்குதலில் காயமடைந்த ஊழியர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# புற்றுநோய் மருந்து விற்பனை; உடன் விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, பெப். 18

மஹரகம அபேக்ஷா வைத்தியசாலைக்கு வழங்கப்பட்ட புற்றுநோய்க்கான மருந்து விற்பனை தொடர்பில் அவசர விசாரணைகளை மேற்கொள்ளுமாறு சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல அமைச்சின் செயலாளருக்கு உத்தரவிட்டுள்ளார்.

விசாரணையின் பின்னர், சம்பவம் தொடர்பாக கடுமையான சட்ட மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுக்குமாறும் அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.

இதற்கமைய நேற்று முன்தினம் இரண்டு விசாரணைக் குழுக்கள் மஹரகம புற்றுநோய் வைத்தியசாலைக்குச் சென்று விசாரணைகளை முன்னெடுத்திருந்தன.

சம்பவம் தொடர்பான ஆரம்ப கட்ட விசாரணை அறிக்கையை 24 மணித்தியாலங்களுக்குள் சமர்ப்பிக்குமாறு சுகாதார அமைச்சின் செயலாளர் மஹரகம வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் அருண ஜயசேகரவுக்கு பணிப்புரை விடுத்திருந்தார்.

இதன்படி நேற்று முன்தினம் சுகாதார அமைச்சின் செயலாளரிடம் அறிக்கை கையளிக்கப்பட்டதாக வைத்தியசாலைப் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

இதேவேளை, மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையில் மார்பக, குடல் மற்றும் எலும்பு புற்றுநோயாளிகளுக்கான புற்றுநோய் எதிர்ப்பு மருந்துகளின் தட்டுப்பாடு மேலும் மோசமாகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், கீமோதெரபி சிகிச்சையின் பின்னர் நோயாளர்களுக்கு ஏற்படும் சிக்கல்களை கட்டுப்படுத்தும் மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஊடகக் குழு உறுப்பினர் ஹன்சமல் வீரசூரிய தெரிவித்தார். (அ)

# சி.ஐ.டியினர் என கூறி வர்த்தகர் கடத்தப்பட்டு பணம் கொள்ளை!

கொழும்பு, பெப். 18

குற்றப்புலனாய்வுத்துறையினர் எனக் குறிப்பிட்டு, ஒருவரை கடத்திச் சென்று, 7 மில்லியன் ரூபா பணத்தை கப்பமாக பெற்றுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் கிராண்ட்பாஸ் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கொழும்பு, கண்டியில் கட்டிடப் பொருள் விற்பனை நிலையங்களை நடத்தி வருபவரான எம்.எஸ்.எம் முஃபித்திக் (வயது-34) என்பவரே கடத்தப்பட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை கிராண்ட்பாஸில் மசூதிக்குச் சென்று கொண்டிருந்தபோது கடத்தல் இடம்பெற்றுள்ளது.

குறித்த வர்த்தகர் கடந்த புதன்கிழமை கிராண்ட்பாஸ் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

அந்த கும்பலின் மிரட்டல் காரணமாக தான் முறைப்பாடு அளிக்க தாமதமாகியது என்று பொலிஸாரிடம் அவர் கூறியுள்ளார்.

இனந்தெரியாத இருவர் தன்னை மறித்து, தாங்கள் சி.ஐ.டியைச் சேர்ந்தவர்கள் என்று கூறி வாகனத்தில் ஏற்றிச் சென்றதாக அவர் பொலிஸாரிடம் தெரிவித்திருந்தார்.

வாகனத்துக்குள் சாரதி உட்பட மேலும் மூன்று பேர் இருந்துள்ளனர். தொழிலதிபரின் கண்ணைக் கட்டி, ஒரு வீட்டுக்கு அழைத்துச் சென்றனர்.அங்கு அவரை கத்தி மற்றும் துப்பாக்கியை காட்டி மிரட்டியுள்ளனர். அவர்கள் ரூ.10 மில்லியனைக் கோரியிருந்தனர். ஆனால் பின்னர் பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து அந்தத் தொகையை ரூ.7 மில்லியனாகக் குறைத்துள்ளனர். நண்பர் ஒருவரின் உதவியுடன் அவர் பணத்தைக் கொடுத்துள்ளார்.

இதன் பின்னர் தெமட்டகொடை ரயில் நிலைய மைதானத்துக்கு அருகில் வர்த்தகர் விடுவிக்கப்பட்டுள்ளார். (அ)

# மசாஜ் நிலையத்தில் அமெரிக்க யுவதி பாலியல் துஷ்பிரயோகம்

## மின்னஞ்சல் ஊடாக முறைப்பாடு

கொழும்பு, பெப். 18

ஹிக்கடுவையில் உள்ள மசாஜ் நிலையம் ஒன்றின் ஊழியரினால் தனது 22 வயது மகள் பாரிய பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளானதாக அமெரிக்கர் ஒருவர் முறைப்பாடு செய்துள்ளார்.

இலங்கையின் சுற்றுலா பொலிஸ் பிரிவின் பணிப்பாளரிடம் அமெரிக்காவிலிருந்து மின்னஞ்சல் மூலம் இந்த முறைப்பாடு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

துஷ்பிரயோகத்துக்கு உள்ளான யுவதி கடந்த டிசெம்பர் மாதம் தனது பெற்றோருடன் இலங்கைக்கு வந்து ஹிக்கடுவையில் உள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்துள்ளார்.

பின்னர், டிசெம்பர் 26ஆம் திகதி தனது தாயுடன் ஹிக்கடுவையில் உள்ள மசாஜ் மையத்துக்கு சென்றுள்ளார்.

அங்கு மசாஜ் செய்த நபர் தனது மகளைக் கடுமையாக பாலியல் வன்கொடுமை செய்ததாக தந்தை செய்த முறைப்பாட்டில் கூறப்பட்டுள்ளது.

மீண்டும் அமெரிக்கா வந்தபோது மசாஜ் நிலையத்தில் பாலியல் வன்கொடுமைக்கு ஆளானமை குறித்து மகள் கூறியதாகவும், இதற்கமையவே தற்போது முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவரது தந்தை மின்னஞ்சல் ஊடாக அனுப்பி வைத்துள்ள முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

காலி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் காலி சிறுவர் மற்றும் பெண்கள் பணியகம் மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளனர். (அ)

## தேர்தலுக்கான...

உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதனிடையே, உள்ளூராட்சி சபை தேர்தல் தபால்மூல வாக்களிப்பு திகதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அடுத்து

வருகின்றது. 2023 ஆம் ஆண்டுக் கான மனிதாபிமான செயல்திட்டம் தற்போது தயாரிக் கப்படுகிறது என்று மனிதாபிமான விவகாரங்களை ஒருங்கிணைப்பதற்கான ஐக்கிய நாடுகள் அலுவலகம் தெரி வித்துள்ளது.

இலங்கை எதிர்கொள்ளும் பல நெருக்கடிகள் தொடர்பில் அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையி லேயே மேற்கண்டவாறு தெரிவித்துள் ளது.

அத்துடன், ஆண்டுக்கு ஆண்டு இலங்கையின் பணவீக்கமும் உணவு பணவீக்கமும் வீழ்ச்சியடைந்திருக்கின்ற போதிலும், பொருளாதார மற்றும் மனித உரிமைகள் நிலைவரம் இன்னமும் மோசமான மட்டத்திலேயே காணப்படு கின்றன.

கடந்த ஆண்டு டிசெம்பரில் 33 சதவீதமான குடும்பங்கள் உணவுப் பாது காப்பின்மைக்கு முகங்கொடுத்திருப்ப துடன் 68 சதவீதமான குடும்பங்கள் நாளொன்றில் உணவு உட்கொள்ளும் அளவைக் குறைத்திருந்தன. குறிப்பாக, பெருந்தோட்டப் பகுதிகளில் உள்ள குடும்பங்களும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களும் முறையே 38 சதவீதம், 37 சதவீதம் என்ற ரீதியில் உணவுப் பாதுகாப்பின்மையால் பாதிக்கப்பட்டி ருக்கின்றன.

அதுமாத்திரமன்றி சிறுவர்கள் மத்தியில் போசணைசார் சிக்கல்கள் உயர்கின்றன. அத்துடன், மருந்துப் பொருட்கள், மருத்துவ உபகரணங்க ளுக்கான தட்டுப்பாட்டின் விளைவாக அரச மருத்துவமனைகளில் அத்தியா வசியமற்ற சத்திரசிகிச்சைகள் இடை நிறுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறான பின்னணியில் இக்கா லப்பகுதியில் மனிதாபிமான தேவைகள் மற்றும் முன்னுரிமைக்குரிய விடயங்கள் தொடர்பான செயல்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட மனிதாபிமான உதவிகள் தொடர்ந்து அதிகரித்திருப்பதுடன் இதுவரையில் இந்த செயல்திட்டத்தில் 28 இலட்சம் மக்கள் பயனடைந்திரு க்கின்றனர்.

உணவுப் பொருட்களைக் கொள் வனவு செய்வதற்கான நிதி மற்றும் காசோலைகளைப்பெற்ற 5 இலட்சத்து 80 ஆயிரம் பேர், உணவுப்பொருள் உதவிகளைப்பெற்ற 6 இலட்சம் பேர், நுண்போசனை பதார்த்தங்களைப்பெற்ற இரண்டு வயதுக்கும் குறைவான 2 இலட்சத்து 87 ஆயிரத்து 100 சிறுவர் கள், திரிபோஷாவைப் பெற்ற 5 இலட்சத்து 30 ஆயிரம் கர்ப்பவதித் தாய்மார், தீவிர மந்தபோசனை குறைபாட்டுக்கு சிகிச்சைபெற்ற ஐந்து வயதுக்குக் குறைவான 3,697 சிறுவர்கள் என்போர் இதில் உள்ளடங்குகின்றனர்.

இதேபோன்று, 12 இலட்சம் மாண வர்களுக்கு பாடசாலையில் உணவு வழங்கப்பட்டு வருகிறது. மேலும் நெற்பயிர்ச்செய்கையில் ஈடுபடும் 8 இலட்சத்து 17 ஆயிரம் விவசாயிகளுக் கும், சோளப் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் ஒரு இலட்சத்து 11 ஆயிரம் விவசாயிகளுக்கும் அவசியமான உதவிகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

இலங்கையை பொறுத்தமட்டில் அடுத்த சில மாதங்கள் மிகமுக்கிய மானவையாகும். மனிதாபிமான த்தேவைகள் மற்றும் முன்னுரிமைக்குரிய விடயங்கள் தொடர்பான செயற்திட்டம் எதிர்வரும் மார்ச் 31 ஆம் திகதியுடன் முடிவுக்க வருகின்றன. தேவையுள் ளவரை மனிதாபிமான நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும். இதேபோன்று 2023 ஆம் ஆண்டுக்கான மனிதாபிமான செயல்திட்டம் தற்போது தயாரிக்கப்பட்டுவருகின்றது - என்றுள்ளது. (ஐ)

## கடன்...

உறுதியளித்துள்ள அவர், நீர் வழங்கல், சக்திவலு, நகரஅபிவிருத்தி, விவசாயம், புதுப்பிக்கத் தக்க சக்திவலு போன்ற துறைகளில் பிரான்ஸின் பங்களிப்பு குறித்தும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதுமாத்திரமன்றி இலங்கையின் பொருளாதாரத்தில் உட்கட்டமைப்பு, டிஜிற்றல் தொழில்நுட்பம் மற்றும் சுகாதாரம் ஆகிய துறைகளில் பிரான்ஸ் கம்பனிகள் எத்தகைய பங்களிப்பை வழங்கமுடியும் என்பது குறித்தும் அவர் இதன்போது கலந்துரையாடியுள்ளார்.

இச்சந்திப்பில் பிரான்ஸுக்கான இலங்கைத்தூதுவர் மனீஷா குணசேகர, பிரான்ஸ் வர்த்தக சமூகத்தின் பிரதிநிதிக ள் மற்றும் பிரான்ஸ் கம்பனிகளின் இலங்கைப் பங்குதாரர்கள் உள்ளிட் டோர் கலந்துகொண்டமை குறிப்பிடத் தக்கது. (ஐ)

## வைரவர்...

பட்டிருந்தன. ஆலயத்தின் சுவர்களிலும் புத்தரின் ஓவியங்களும் வரையப்பட் டுள்ளன. ஆலயத்தின் வாசலிலும் சந்திரவட்டக் கல் பதிக்கப்பட்டுள்ளது என்றும் தெரி விக்கப்பட்டது.

இதேவேளை, கடந்த 2021ஆம் ஆண்டு டிசெம்பர் வலி. வடக்கு உயர் பாதுகாப்பு வலய பிரதேசங்களில் உள்ள இந்து ஆலயங்களின் சிலைகள் திரு டப்பட்டு, கொழும்புக்கு கடத்தப்பட்டு விற்பனை செய்யப்பட்டன. இவ்வாறு விற்பனை செய்யப்பட்ட 20 சிலைகளை காங்கேசன்துறை பொலிஸார் மீட்டனர்.

இது தொடர்பான பொலிஸாரின் விசாரணைகளில் இராணுவம் மற்றும் கடற்படையினர் தொடர்புபட்டனர் என்று கூறப்பட்ட நிலையில், இந்த விசாரணைகள் அடுத்த கட்டத்துக்கு நகர வில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பிரச்னையை...

எதிராக செயல்படுத்துகின்றார் - என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸநாயக்க குற்றஞ்சாட்டியுள் ளார்.

நேற்று யாழ்ப்பாணம் வந்த அவர் டிம்பர் மண்டபத்தில் செய்தியாளர் களை சந்தித்தார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், "மோசடியாளர்களே இந்த நாட்டை அழிவுக்கு கொண்டு வந்தனர். எனவே, நாட்டுக்கு நல்ல அரசாங்கம் தேவை. மோசடிக்காரர்க ளுக்கு தண்டனை வழங்குகின்ற அர சாங்கம் தேவை. அதற்காக அனைவரும் ஒன்றாக வேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறுகின்றார் 13ஆவது திருத்தச் சட்டத்தை வழங்குவோம் என்று. பொலிஸ், காணி அதிகாரத்தை வழங்குவோம் என்று கூறுகின்றார். இது ஏன்? தென்னிலங்கையில் பெரிய பிரச்னையை உருவாக்கி அங்கு ஆர்ப் பாட்டங்களை உருவாக்கவே. உண்மை யான பிரச்னை ஆட்சியாளர்களுக்கு எதிராக இருக்கின்றது. அதனைவிடுத்து ஆட்சியாளர்களுக்கு எதிராக சிங்கள மக்களை குழப்பி வட மாகாண தமிழ் மக்களுக்கு எதிராக செயல்படுத்து கின்றார்.

இந்த ஜனாதிபதி நான்கரை வரு டங்கள் பிரதமராக இருந்தார். புதிய அரசமைப்பு யாப்பை தயாரிப்பதற்கு ஒரு சபை நிறுவப்பட்டது. அதற்கு ஒரு குழுவை அமைக்கப்பட்டது. இதில் 82 கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. அதில் எந்தவோர் அறிக்கையும் புதிய அரசமைப்பு யாப்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பிக்கவில்லை.

வடக்கை சூடான நிலையில் வைத்திருக்க - அந்த நிலையை உருவாக் கவே - தேர்தல் வரும்போது 13 ஆவது திருத்தச் சட்டம் என்ற பந்தை வடக்கில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர் க. வி. விக்னேஸ்வரனும் தென்னிலங்கை பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்காரவும் அடித்து விளையாடு கின்றனர் - என்றார். (ஐ)

# பயிருக்கு சேதம் விளைவிக்கும் ஆறு விலங்குகளை கொல்லலாம்!

## விவசாய அமைச்சர் மகிந்த

கொழும்பு, பெப். 18

பயிர்களை அழிக்கும் குரங்குகள் உட்பட ஆறு விலங்குகளை கொல்ல விவசாயிகளுக்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது என்று விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர நேற்று தெரி வித்துள்ளார்.

உருளைக்கிழங்கு விவசாயிகளுட னான சந்திப்பின் போது, குரங்குகள் அப்பகுதியில் உருளைக்கிழங்கு பயிரிட முடியாமல் பயிர்களை நாசம் செய்வது குறித்து அமைச்சரிடம் தெரிவிக்கப்பட் டது.

இதற்கு பதிலளித்த அமைச்சர், குரங்குகள் உட்பட பயிர்களை அழிக்கும் ஆறு விலங்குகள் இலங்கையில் பாது காக்கப்பட்ட விலங்குகள் பட்டியலில் இருந்து அண்மையில் நீக்கப்பட்டன. எனவே, அச்சுறுத்தலை சமாளிக்க எந்தவொரு நடவடிக்கையையும் விவசாயிகள் பயன்படுத்த முடியும்.

வெளிநாட்டில் நடத்தப்பட்ட ஆய்வுகள் உட்பட அதிகப்படியான ஆய்வுகளை மேற்கொண்ட பின்னர், சிக்கலைத் தீர்க்க வேறு வழிகள் இல்லை என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது - என்றும் கூறியுள்ளார் அமைச்சர். (ஐ)

### கனடா, அமெரிக்கா போன்று

# போர் குற்றவாளிகளுக்கு தடை விதிப்பீர்களா?

## பின்லாந்து எம். பி. அரசிடம் கேள்வி

ஹெல்சிங்கி, பெப். 18

இலங்கையின் போர்க் குற்றவாளிக ளுக்கு எதிராக கனடா மற்றும் அமெரிக் காவை போன்று பின்லாந்தும் தடை களை விதிக்குமா? என்று அரசாங்கத்தி டம் அந்நாட்டின் பாராளுமன்ற உறுப்பினர் ஹூசைன் அல்-ரயீ கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பான கேள்விகளை பின்லாந்து பாராளுமன்ற உறுப்பினர் ஹூசைன் அல்-ரயீ அந்நாட்டு அரசாங்கத்திடம் எழுத்துமூலம் சமர்ப்பித்துள்ளார்.

அதுமாத்திரமன்றி இலங்கை அரசாங்கத்தால் தமிழ் மக்களுக்கு எதிரா கத் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் இன ஒடுக்குமுறைகள் குறித்தும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இலங்கையில் இடம் பெற்ற இனப்படுகொலை மற்றும் போர்க் குற்றங்கள் தொடர்பில் பொறுப் புக்கூறலை உறுதிசெய்யுமாறு சர்வதேச சமூகம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்ற போதிலும், பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்துவதற்கு அவசிய மான மிகக்குறைந்தளவிலான நடவ டிக்கைகளே முன்னெடுக்கப்பட்டிருக் கின்றன - என்றும் கூறியுள்ளார். (ஐ)

## கல்முனை...

இது தொடர்பில் சந்திரசேகரம் ராஜன், வடிவுக்கரசு சந்திரன், கதிரமலை செல்வராஜா ஆகிய மாநகர சபை உறுப்பினர்கள் நேற்று நடத்திய செய்தி யாளர் சந்திப்பில்,

"கல்முனை மாநகர சபையின் இந்த மாத அமர்வில் கல்முனை பொது நூ லகத்துக்கு முன்னாள் அமைச்சரான ஏ. ஆர். எம். மன்சூரின் பெயரை சூட்டுவ தாக தெரிவிக்கப்பட்டமை கண்டிக் கத்தக்கது.

"மன்சூர் கடந்த காலங்களில் இன, மத பேதமின்றி சேவை செய்தவர். இருந்த போதிலும் தற்போது எதிர்வரும் தேர்தலை குறிவைத்து சிலர் இந்த விடயத்தை அரசியலாக்கி மக்கள் மத்தி யில் குழப்பங்களை ஏற்படுத்துகின்றனர்.

"கல்முனை பொது நூலகம் இரு சமூகத்தை சேர்ந்தவர்களின் பொதுச்சொத்து. இந்த நூலகத்தின் பெயரை மாற்ற சிலர் மறைமுகமாக முயல்கின்றனர். இதனை நாம் வன்மை யாக கண்டிக்கின்றோம். சில அரசியல் வாதிகளே தங்கள் அபிலாசைகளை நிறைவேற்ற இவ்வாறு செயல்படு கின்றனர். தேர்தல் காலங்களில்தான் இவர்கள் இவ்வாறு செயல்படுகின்றனர்.

"கல்முனை மாநகர கட்டடத்தில் இயங்குகின்ற நூலகமானது கல்முனை பொது நூலகம் என்றே அழைக்கப்பட்டு வந்துள்ளது. ஆனால், ஒரு தனி நபரின் பெயரை இந்த நூலகத்துக்கு ஏன் தற்போது சூட்ட முயற்சிக்கின்றீர்கள்? தமிழ் மக்களாகிய நாங்கள் இந்த செயல் பாட்டை முற்றாக நிராகரிக் கின்றோம். ஏனெனில், இனங்கள் இரண்டும் ஒன்றுபட்டதுதான் கல்முனை பிரதேசம். கல்முனை மாநகர சபை இரு சமூகத்துக் கும் சொந்தமானது. எனவே இனியாவது இந்த செயல்பாடுகளை தவிருங்கள் இனங்களி டையே இன முரண்பாட்டை ஏற்படுத்தாதீர்கள்", என்றனர். (ஐ-01)

## மூடிய பல்கலை மீள திறப்பு

கொழும்பு, பெப். 18

பகிடி வதையால் மூடப்பட்ட பௌத்த மற்றும் பாலி பல்கலைக் கழகத்தை கல்வி நடவடிக்கைகளுக்காக மீண்டும் திறக்க தீர்மானிக்கப்பட்டுள்ள தாக அதன் உப வேந்தர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், முதலாம் வருட மாணவர்களுக்காக இந்த மாதம் 27ஆம் திகதி பல்கலைக்கழகம் மீண்டும் திறக்கப்படும் என உபவேந்தர் குறிப்பிட் டுள்ளார்.

இதேவேளை, அங்கு இடம்பெற்ற பகிடிவதை சம்பவத்தையடுத்து கடந்த 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 19 ஆம் திகதியுடன் பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகம் தற்காலிகமாக மூடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## முன்னாள்...

பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக செயல்பட்டிருந்தார்.

தமிழ்த் தேசியப் பற்றாளராகவும் அறி யப்பட்ட இவர் அதற்காக பல வழிகளி லும் அர்ப்பணிப்புடனான சேவைகளை ஆற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நாணய...

ஜி-20 மாநாடு தொடர்பான வட்ட மேசை மாநாடு நேற்று இந்தியாவின் பெங்களூரில் ஆரம்பமானது. அநேகமாக இந்த மாநாட்டில் இலங்கை உள்ளிட்ட நாடுகளுக்கு சாதகமான முடிவு எட்டப்படும் என்று கூறப்படு கின்றது.

இதுதவிர, சீனா இலங்கைக்கு ஆதரவளிக்க முன்வருவதாக அண்மை யில் அறிவித்தது. அது எந்தவகையில் என்பதை வெளிப்படுத்தவில்லை என்ப தும் நினைவில்கொள்ளத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# இலங்கையில் மத அடிப்படைவாதம் மிகவேகமாக வளர்ந்து வருகின்றது!

## கூறுகின்றார் அர்ஜுன் சம்பத்




**வவுனியா, பெப். 18**

**இலங்கையில் மத அடிப்படைவாதம் வேகமாக வளர்ந்து வருவதாக தமிழக இந்து மக்கள் கட்சியின் நிறுவனர் அர்ஜுன் சம்பத் தெரிவித்துள்ளார்.**

**வவுனியாவுக்கு நேற்று விஜயம் செய்த அவர் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு கூறினார்.**

அவர் மேலும் கூறுகையில்-

தற்போதைய பொருளாதார சிக்கல்களில் இருந்து மீண்டெழுவதற்கான நடவடிக்கைகளை இலங்கை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக பன்னாட்டு உதவிகள் இங்கே கிடைக்கப்பெறுகின்றது. இந்திய அரசும் பெரியளவில் இலங்கைக்கு உதவி வருகின்றது.

குறிப்பாக வீதிகள், ரயில் பாதைகள், வீட்டுத்திட்டம் அத்துடன் கடன்கள் என்று பிரதிபலன்னை கருதாமல் பல உதவிகளை செய்துவருகின்றது.

சீனாவும் பல விடயங்களை இங்கே செய்கின்றது. கொழும்பில் ஒரு கலாசார மண்டபத்தை அமைத்தார்கள். ஆனால் அதன் நிர்வாகத்தை அவர்களே வைத்துள்ளனர். ஆனால் இந்திய அரசால் அமைக்கப்பட்ட கலாசார மண்டபத்தின் நிர்வாகத்தை இலங்கை அரசிடமே ஒப்படைத்திருக்கின்றது. இருப்பினும் அதனை யாழ்பாண மாநாகரசபையிடம் ஒப்படைத்திருக்கவேண்டும்.

அத்துடன் வறுமை, பொருளாதார பிரச்னைகளில் இருந்து இலங்கை மக்கள் விடுபடவேண்டும். அதற்குரிய மேம்பாடான திட்டங்களை வகுத்து நல்ல விதமாக செயற்படுவதற்கான பிரார்த்தனைகளை நாம் செய்கிறோம்.

இதேவேளை, இலங்கையில் மத அடிப்படைவாதம் வேகமாக வளர்ந்துவருகின்றது. இங்கு வசிக்கும் சிங்கள மக்களாக இருக்கலாம், தமிழ்மக்களாக இருக்கலாம் அனைவரும் மண்ணின் மைந்தர்கள். ஆனால் வெளிநாடுகளில் இருந்து வருகை தந்து மதமாற்றும் செயற்பாடுகள் இங்கு இடம்பெறுகின்றது.

அண்மையில் இடம்பெற்ற ஈஸ்டர் தாக்குதல் உலகையே உலுக்கியிருந்தது. எனவே மதவாதம், பயங்கரவாதம் ஆயுத காலாசாரம் முடிவிற்கு வரவேண்டும். அமைதியான வளமான இலங்கை உருவாக வேண்டும் - என்றார். (அ-7)

# வாக்குச்சீட்டு அச்சிட தயார்!




*கொழும்பு, பெப். 18*

வாக்குச் சீட்டுகளை அச்சிடுவதற்கான செலவு பின்னர் வழங்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு வழங்கிய எழுத்துமூல வாக்குறுதியின் பிரகாரம், தபால் மூல வாக்குச் சீட்டுகளை அச்சிடத் தயார் என அரசாங்க அச்சகர் கங்கானி கல்பனா லியனகே தெரிவித்தார்.

ஆனால் வாக்குச் சீட்டுகள் அச்சிடுவதற்கு பொலிஸ் பாதுகாப்பு இல்லாததால் பணிகளை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

வாக்குச் சீட்டுகளை அச்சிடுவதற்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்குமாறு பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு ஏற்கனவே நான்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வாக்குச் சீட்டுகளை அச்சிடுவதற்கு 65 பொலிஸ் உத்தியோகத்தர்கள் தேவைப்படுவதாகவும் லியனகே தெரிவித்தார்.

இதேவேளை, பொலிஸ் பாதுகாப்பின்றி வாக்குச் சீட்டு அச்சிடப்பட்டமை தொடர்பில் தொழிலாளர்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு எழுந்துள்ள நிலையில், மீண்டும் வாக்குச் சீட்டுக்களை எண்ணி சான்றளிக்கவேண்டியுள்ளதாக அச்சக அதிகாரி மேலும் தெரிவித்தார்.

12 மாவட்டங்களில் தபால் வாக்கு சீட்டுக்கள் அச்சடிக்கும் பணி நிறைவடைந்துள்ளதாக அரசு அச்சகம் தெரிவித்துள்ளது. (அ)

# கடற்படை சிப்பாய் கைது!

*கொழும்பு, பெப். 18*

குருநாகல் நோக்கிச் சென்றுகொண்டிருந்த பஸ் ஒன்றுக்குள் வைத்து 40 வயதுடைய பெண் ஒருவரை பாலியல் தொந்தரவு செய்த குற்றச்சாட்டின் பேரில் கடற்படைச் சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டார் என பொத்துஹெர பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட 26 வயதுடைய சந்தேக நபர் திருகோணமலை கடற்படை முகாமில் பணிபுரிந்து வருகிறார்.

குறித்த பெண் பாலியல் தொந்தரவுக்கு உட்படுத்தப்பட்டமை தொடர்பில் பொத்துஹெர பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்து, பொலிஸ் குழுவொன்று மல்பிட்டிய பிரதேசத்தில் பஸ்ஸை நிறுத்தி சந்தேக நபரான சிப்பாயை கைது செய்தது. (அ)

# கிளிநொச்சியில் காணிகளை விடுவிப்பது குறித்து ஆராய்வு

*கிளிநொச்சி, பெப். 18*

மக்கள் பயன்பாட்டுக்கு காணிகளை விடுவிப்பது தொடர்பான விசேட கலந்துரையாடலொன்று நடைபெற்றுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இந்த கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் வனவள திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களம் வசமுள்ள காணிகளை விடுவிப்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

நீண்ட காலமாக மக்கள் பயன்பாட்டில் இருந்த காணிகளை குறித்த திணைக்களங்கள் தம்வசப்படுத்தியிருந்த நிலையில், அவற்றை விடுவிக்குமாறு மக்கள் பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டனர் என ஜனாதிபதி செயலகத்தின் சமூக விவகார பணிப்பாளர் நாயகம் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்தார்.

இதன்போது, 300 ஏக்கருக்கு மேற்பட்ட காணிகள் விடுவிக்கப்படவேண்டி உள்ளதாகவும், விரைவாக விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் கூறினார்.

இந்த கலந்துரையாடலில் ஜனாதிபதியின் வடக்குக்கான விசேட செயலாளர் எல்.இளங்கோவன், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், பிரதேச செயலாளர்கள் மற்றும் திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (அ)

# பெரும் பணிப்புறக்கணிப்புக்கு தயாராகும் தொழிற்சங்கங்கள்!

*கொழும்பு, பெப். 18*

அரசாங்கத்தின் வரிக்கொள்கை மற்றும் மின் கட்டண அதிகரிப்புக்கு எதிராக தொழிற்சங்கங்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடத் தீர்மானித்துள்ளன.

இதற்கமைய எதிர்வரும் முதலாம் திகதி தொழிற்சங்கங்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெற்றோலியம், துறைமுகம், நீர்பாசனம் மற்றும் மின்சாரம் ஆகிய தொழிற்சங்கங்களே இவ்வாறு பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவதற்கு தீர்மானித்துள்ளன.

மருத்துவ, பொறியியலாளர், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கம், வங்கிகளின் தொழிற்சங்க சம்மேளனங்கள் இந்த ஆர்ப்பாட்டத்துக்கு ஆதரவை வழங்கவுள்ளதாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நெல்லை 160 ரூபாவுக்கு மேல் கொள்வனவு செய்யவேண்டும்

## அரசிடம் கோரிக்கை

*கொழும்பு, பெப். 18*

நெல்லை 160 ரூபாவிற்கு மேல் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் என கிளிநொச்சி பிரஜைகள் குழு கோரிக்கை விடுத்துள்ளது.

கிளிநொச்சி பிரஜைகள் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே குழுவின் செயலாளர் சிங்கராசா ஜீவநாயகம் இந்த கோரிக்கையை முன்வைத்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பரந்தன் விஜயத்தின்போது நெல்லை 100 ரூபாவுக்கு கொள்வனவு செய்யுமாறு கூறியபோதும் அதனை ஏற்க விவசாயிகள் தயாரில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

விவசாயிகள் ஒவ்வொருவரும் உற்பத்திச் செலவுக்கு மேலதிகமாக 25000 ரூபாவுக்கு மேலாக இழப்பை சந்திப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# மின்சார கட்டணத்தை உயர்த்தும் முடிவுக்கு எதிரான மனு தள்ளுபடி!

*கொழும்பு, பெப். 18*

மின்சார கட்டணத்தை அதிகரிப்பதற்கான அமைச்சரவை தீர்மானத்திற்கு எதிராக சுற்றாடல் நீதி மய்யம் மற்றும் இலங்கை மின்சார நுகர்வோர் சங்கம் இணைந்து தாக்கல் செய்த ரிட் மனுவை நிராகரித்து மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்துள்ளது.

சோபித ராஜகருணா மற்றும் தம்மிக்க கணேபொல ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வு முன்னிலையில் இந்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

இந்த மனுவில் பிரதிவாதிகளாக இலங்கை மின்சார சபை, பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, சட்டமா அதிபர் மற்றும் அமைச்சரவை குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# மரண அறிவித்தல்



## திருமதி
## பரமேஸ்வரி சச்சிதானந்தம்

மலேசியா ஐ பிறப்பிடமாகவும், கருகம்பனை, பன்னாலை, கனடா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட பரமேஸ்வரி சச்சிதானந்தம்(பேபி அக்கா) கடந்த 10-02-2023 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் (கருகம்பானை) - விஜயலட்சுமி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்(முன்னாள் நீதிபதி பன்னாலை) - அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சச்சிதானந்தம்(கூட்டுறவு ஆய்வாளர்) அவர்களின் அன்பு மனைவியும், லோகேஸ்வரி( கனடா), காலஞ்சென்ற வைத்தீஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், செந்தில்செல்வன்( கனடா) அவர்களின் அன்பு மாமியாரும்,குருபரன், அம்பிகாபரன் ஆகியோரின் பாசமிகு பேத்தியும், காலஞ்சென்ற ராஜேஸ்வரன்(பிரதி பொலிஸ் மா அதிபர்), ராஜேஸ்வரி(லண்டன்), மகேஸ்வரி(கொழும்பு), காலஞ்சென்ற புவனேஸ்வரி, ராஜேந்திரன்(மெல்போன்), அருளம்பலம்(லண்டன்), இளையதம்பி(லண்டன்), கமலாதேவி(கொழும்பு), கமலாம்பிகை(லண்டன்), நகுலேஸ்வரி (லண்டன்), நகுலேஸ்வரன்(லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற நீதிபதி வைத்திலிங்கம்(உச்ச நீதிமன்ற நீதிபதி) அவர்களின் உடன்பிறவாச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளைமறுதினம் திங்கட்கிழமை (20.02.2023) பிற்பகல் 2.00 முதல் 3.30 மணியளவில் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
**செந்தில்செல்வன்**
**(மருமகன்)**

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 18.02.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.